1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

76-ம் புத்தகம் 10-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம்ஆண்டு பங்குனிமாதம் 8-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## ஊதாரிப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

c. கடைசிநாளில் சகலமனுஷர்முன்னும் வெட்கம்அடைந்து நித்தியசாபத்துக்குள்ளாவார்கள். உனது ஆத்துமத்தின் இரகசியங்களை அறிய விசேஷ தேவவரம்பெற்ற ஒரு குருவானவர் பிரசங்கபீடத்திலிருந்து அவற்றையெல்லாம் வெளியிட்டால் உனக்கு எவ்வளவுபெரும்வெட்கம்! எவ்வளவு கலக்கம்! நீ கோயிற்சுவர்களை நோக்கி: "எனக்குமேலே விழுங்கள்! என்னைநசுக்கிவிடுங்கள்" என்று சொல்லமாட்டாயா? ஆனல், நீ வேணுமென்று பாவசங்கீர்த்தனத்திலே ஒளித்தபாவங்களை எல்லாம் வெட்டவெளியாக்கப்படும் ஒருநாள் கட்டாயம்வரும். ஒருஆலயத்தில் கூடியிருப்பவர்கள் சமுகத்தில் அல்ல, எல்லா மனுஷர், எல்லாச்சம்மனசுகள், எல்லாப்பிசாசுகள் முன்னிலும் அப்பாவங்கள் வெளியாக்கப்படுமே.

### 2. ஊதாரிப்பிள்ளை திரும்பிவரல்

ஊதாரிப்பிள்ளை திரும்பிவரும்பொழுது இன்னும் தூரத்திலே அவனைக்கண்டதகப்பன் பெரிதும் மனஅருட்சியுடன் ஓடிப்போய் அவனைக்கட்டிஅரவணைத்து முத்தமிட்டான். மகனும் தகப்பனைநோக்கி, "பிதாவே! நான் பரலோகத்துக்கும், உமக்கும்விரோதமாகப் பாவஞ்செய்தேன். நான் உமது மகன் என்று அழைக்கப்படப் பாத்திரவானல்ல" என்ருன். தகப்பனே மகன்சொல்லி முடிந்தது முடியாமுன் தன்ஊழியகாரரை நோக்கி, "அதிகம்அலங்காரமானஉடைகளை விரைவிற் கொண்டுவாருங்கள். கொண்டுவந்து அவைகளை என் மகன் அணியச்செய்யுங்கள். அவனுடையவிரலில் கணையாழியைப் போடுங்கள். கொழுத்த காளைகளைக். கொண்டுவந்து அடியுங்கள். நாம்உண்டு விருந்து கொண்டாடுவோம். இதோ! இழந்துபோன என்மகன் உயிரோடு இருக்கின்ருன். காணமற்போனமகன் திரும்பிக் காணப்பட்டான்" என்றுசொல்லி எல்லாரும் விருந்து கொண்டாடினர்கள். (லூக். 15)

நல்லபாவசங்கீர்த்தனஞ் செய்யும் ஒருபாவியைச் சருவேசுரனும் இவ்விதமாகவே ஏற்றுக்கொள்ளுகிருர்.

1. சருவேசுரன் ஆத்துமத்தைச் சுற்றியிருக்கும் கந்தைகளாகிய அசுத்தங்கள் எல்லாவற்றையும் களைந்துவிடுகிருர். நல்லபாவசங்கீர்த்தனம் பாவங்களைப்பொறுத்து நித்தியஆக்கினையை நீக்கிவிடுகின்றது. அநித்திய ஆக்கினையிலும் ஒருபகுதியையாவது அகற்றிவிடுகின்றது.

2. சருவேசுரன் அந்தஆத்துமத்துக்கு அதிஅலங்காரமான அங்கியை — இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கிருர். கொடுத்து "இறந்தஎன்மகன் உயிர்த்துவிட்டான்என்று ஆனந்தங் கொள்ளுகின்ருர்." ஆம், நல்லபாவசங்கீர்த்தனம் இஷ்டப்பிரசாதத்தையும், சுபாவத்துக்கு மேலான புண்ணியங்களையும், இஸ்பிரீத்துசாந்துவின் கொடைகளையும் திரும்பத்தருகின்றது. உனதுஆத்துமம் தெய்வீகசீவியத்துக்கு மரித்திருந்தது. இப்பொழுதுஅது அச்சீவியத்துக்கு மீண்டும் உயிர்த்துவிட்டது.

உனதுஆத்துமம் அழுக்குப்பிடித்துக் கோரரூபமுள்ளதாய் இருந்தது. இப்பொழுதுஅது தேவசெம்மறிப்புருவையிற் கழுவப்பட்டு, பனிக்கட்டிபோலும் வெண்மையாய், நீதியும் பரிசுத்ததனமும்நிறைந்ததாய்ச்சம்மனசுகளுக்கும், தேவனுக்குத் தானும் ஆனந்தபரவசம்உண்டுபண்ணுவதாய் இலங்குகின்றது. நீ தேவசமுகத்திற் கிடுநடுக்கம் உற்று, அவருடையதீர்வைக்கு அஞ்சி, நரகத்தைநினைத்துத் திடுக்காட்டம்கொள்ளவேண்டியவன். ஆனல், இதோ! நல்லபாவசங்கீர்த்தனத்தின்பின் நீ பரலோகத்தைநோக்கி உன்கைகளை உயர்த்திச் சருவேசுரனை என்பிதாவேஎன்னும் மதுரித நாமத்தினல்அழைக்க உரிமை பெற்றிருக்கிருய். நீ தேவனுக்குப் பிள்ளை. யேசுக்கிறீஸ்துநாதருடைய சகோதரனும், நண்பனும, அவருடைய உயிருள்ள அவயவமுமாகிவிட்டாய். தேவமாதாவின் உண்மையான பிள்ளையும், பரலோகம், உத்தரிக்கிறஸ்தலம், பூலோகம்ஆகிய மூவுலகங்களிலிருக்கும் அர்........ நீதிமான்களின் சகோதரனும் ஆகிவிட்டாய். நீ பரமதிரித்துவத்தின் ஆலயம். நீ மோட்ச இராச்சியத்துக்குச் சொந்தக்காரன்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## வேதப்பிரசுர பரப்புதல் ஞாயிறு

அக்ண்டதும், ஆழ்ந்ததும், பிரமாண்டமுமான கல்விஎன்னும் மகாசமுத்திரத்தைத் தாண்டி—"கல்விகரையில" என்பதும் முதுமொழி—ஏதோ ஒரு துறையைச்சேர்ந்து சூழவுள்ளவர்களின் பெருமதிப்பை அடைந்துகொள்ள வேண்டுமென்றபேராவல் தற்காலத்திலேஎம்தேசமக்களுள் அமோகமாக எழுந்துள்ளது. தூரதேசங்களுக்குச் சென்று ஆர்வத்தோடும், அரும்பிரயாசையோடும் பல்வேறு சாஸ்திரங்களிலே பண்டிதபட்டங்கள்பெற்றுக் கலைவாணரென நாமமுந்தாங்கியபின் எம் தாய்நாட்டுக்குத்திரும்புவோர் இன்று பலரேயாம். "கற்கை நன்றே! கற்கைநன்றே!" கற்ருேர்க்குச்சென்றவிடமெல்லாஞ் சிறப்பலலவா? நன்று!

ஆயினும் இந்தமாயப் பிரபஞ்சத்துக்கடுத்த கலைகளை நமது மக்கள் கற்றுக்கொள்ள எத்துணை ஆர்வங்காண்பித்து இடையருது முயற்சிப்படுகின்ருர்கள். மின்னிமறையும் அநித்தியத்துக்கான அறிவினைவளர்க்க அவர்கள்சிரமத்தைப்பாராது எவ்வளவோ அரும்பாடுபடுகின்ருர்கள். ஆனல், என்றுமேஅழியாத நித்தியத்துக்கடுத்த கலைகளைத் தேடிப்படிக்கச் சிரத்தை கொள்வோர் சிலரேயாம். "இடதுசாரி, வலதுசாரி"யென்பவைகளை மனத்தில்இருத்திப் பெரிதும்ஆவேசத்துடன் அவைசம்பந்தமானவைகளைக்கற்றுக் கும்பல்குவியலாய் அவைகளைக் குறித்து எழுதித்தள்ளுகிருர்கள். ஆனல், பரலோகசாரி, பாதாளசாரியும் நிச்சயமாய்உண்டென்பதை அவர்கள் சிந்திக்கிருர்களில்லை. லௌகீகம், வைதீகம் ஆகிய இவைகள்இரண்டிலும் எது முதன்மைவாய்ந்தது? சற்றே சிந்திப்பாயாக.

நான்கிறீஸ்துவன்! நான்கத்தோலிக்கன்! இதுவேஎன்மகிமை! இதுவே என்பெருமை! என்று நம்முள்அநேகர் வாய்ப்பறையறைந்து பெருமைபாராட்டுகின்றனர். இது ஓரளவில் நன்றுதான். ஆனல், இவர்கள் தங்கள் வேதவிசுவாசத்துக்கு ஆதாரமானவைகளை எடுத்துக்காட்டி, அறியாதவர்கட்கு நியாயஞ்சொல்லஇயலாது அறிவீனத்தினல் மயங்குகின்ருர்கள். பெட்டிபீற்றல். வாய்க்கட்டுத்திறம். ஆங்கிலத்தைஓரளவில் கற்று, மனவருட்சிக்குரிய பல நூதன கட்டுக்கதைகளையும், காவியங்களையும் வாசிப்பதிலே தமதுஓய்வுநேரத்தை அதிகமாகச்செலவுசெய்யும் நமதுகத்தோலிக்கபழையமாணவர்ஒருவர் சில ஆண்டுகள் சென்றபின் நம்மைக் காணவந்திருந்தார். அவருடன் நான் வெகுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தபோது இடையிலே நான் அவரிடம் வினவியவைகளில் சிலவற்றையும், அவர் இறுத்தவிடைகளையும் சுருக்கமாகக் கீழேதருகின்றேன்:

தம்பி! நீர்வேதவாக்கியத்தை இடையிடையேயாவது வாசிக்கின்றீரா? இல்லை. சிஷ்டர்களுடையசரிதைகளை? இல்லை. வேதசத்தியங்களைச் சார்ந்தவைகளை? இல்லை. திருச்சபையின்சரிதைகளை? இல்லை. கத்தோலிக்க பிரசுரங்கள், பத்திரிகைகளை? இல்லை. அவரோடு சம்பாஷித்ததின்பயனகை அவருடையவிசுவாசம் தளர்ந்துபோயிருந்ததை விசனத்துடன் கண்டுகொண்டேன். இவர் சிலவருடங்களாகக் கோவில்முகம், குருமுகம் அறியார்: காலகதியிலே இவர் தமது வேதவிசுவாசத்தையும் முற்ருய்இழந்துவிட்டு நித்திய கேட்டுக்கு உள்ளாகவுங்கூடுமென அவரை நான்அன்பாய், ஆவலாய்எச்சரித்தேன். அவருடைய பரிதாபமானநிலைமையில யாதொருநூதனமுமில்லை. ஏன்? அவர் தமதுஆத்துமாவை நெடுங்காலம் பட்டினிபோட்டுப் பலவீனப்படுத்திவிட்டார். "அத்தேசத்திலே கடும்பஞ்சம்.... அவன்பசியால் வருந்தினன்" (லூக். 15—14-16)

யாழ்ப்பாணமேற்றிராசனத்திலே அரைலட்சத்துக்குமேற்பட்ட கத்தோலிக்கர் இருக்கின்றனர். இவர்களுள் எத்தனையோபேர் இயல்பிருந்தும், பணமிருந்தும் "சத்தியவேதபாதுகாவல"னை ஆதரிக்கமுன்வராது அலட்சியஞ்செய்கின்ருர்கள். "சினிமா"ப் படங்களைப்பார்க்க வருடத்திலே அறுபதுஎழுபது ரூபாவென்று செலவுசெய்கிறவர்கள், "பாதுகாவல"னுக்கு வருடத்திலே ஒருஐந்துரூபாகொடு

— நூ. அ. —

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபத்தைந்து வருடகாலப் புதுமை

நமது திவ்வியஇரட்சகரின் திருக்காயங்கள் புதுமையாகத் தங்களிலே பதியப்பெற்றவர்களான சுமார்நானூறுபேரைப் பற்றிச் சமீபகாலத்திலே ஆராய்ச்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவர்களில் நூற்றுக்குத் 90 பேரும் பெண்மணிகளே. இவர்களிலெல்லாம் தெரேசா நியூமனைக்காட்டிலும் அதிகமானகவனத்தை ஈர்ந்தவர்கள் வேறெவருமேயில்லை. ஏனெனில், இவளிலே சுபாவத்திற்கு மாறான காரியங்கள் கடந்த 25 வருடங்களுக்குமேல் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. தெரேசா நியூமன் பவேரியாவிலே செக்கோசிலவெக்கியாநாட்டின் எல்லைப்புறத்துக்குச் சமீபமான கொன்னேர்ஸ்றாத்எனும்சிறிய கிராமத்திலே 1898-ம்ஆண்டு சித்திரைமாதம் 9-ந்திகதி பெரியவெள்ளிக்கிழமையன்று பிறந்தாள். அக்கிராமத்துக் கஷாப்புக்காரனின் பத்துப்பிள்ளைகளில் மூத்தவள் இவளே. 20 பிராயமுடையவளாய் இருக்கும்போது அங்குமூண்ட ஓர்தீயை வேகரமாக அணைக்கையில் இவள் தனது முதுகெலும்பைக் காயப்படுத்திக் கொண்டாள். அத்தோடு கண்ணும் குருடாகப் பாரிசவாதமும் உண்டாயிற்று. 1925-ம் ஆண்டு திரும்பவும் இவள் கண்பார்வையடைந்துகொண்டாள். சிறியபுஷ்பத்தின் சலிகையாலேயே தான்குணமடைந்ததாக இவள் கூறுகின்றாள். ஒவ்வோர்வாரமும் வியாழக்கிழமை நடுச்சாமவேளை முதல மறுநாள்வெள்ளிக்கிழமை பிற்பகல்வரையில் இவள் பரவசமுற்று அதிகவேதனை அனுபவிக்கும்போது, அவள்தோலின் மயிர்த்துவாரங்கள்வழியாக இரத்தத்துளிகள் வியர்வையாகக் கசிகின்றன. இவள் தனது கரங்களிலும், பாதங்களிலும், சிரசிலும் முதுகிலும், இரத்தாசயபகுதியிலும் காயங்களைக் கொண்டிருக்கின்றாள். 1927-ம் ஆண்டுமுதல் இவள் உணவே புசித்தறியாளெனத் தெரியவருகிறது. திவ்வியநற்கருணை மாத்திரமே இவளின் உதடுகளினூடாகச் செல்கிறது. சென்றமகாயுத்தம் நடந்தகாலத்திலே உணவுப்பங்கீட்டுத் துண்டுகள்வாங்க இவள் மறுத்துவிட்டாள்.

### ஐந்தாவது பெரியஆலயம்

உலகில் ஐந்தாவதுமகாப் பெரிய ஆலயமாய் மதிரித்நகரிலே ஸ்பானியமக்களின் இராக்கினியாகிய தேவமாதாவின் பஸிலிக்கா மகாலயம் ஒருவருடகாலமாக இடப்பட்ட அஸ்திவாரங்களின்மேல் இப்போது கட்டியெழுப்பப்பட்டு வருகிறது. இது அமலோற்பவ விசுவாசசத்தியம் பிரகடனஞ்செய்யப்பெற்ற நூறாம் ஆண்டுவிழாவாகிய 1954-ம்ஆண்டு மார்கழி மாதம் 8-ந்திகதி ஆராதனைக்குத் திறந்துவைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்பெயினையும், லத்தீன்அமெரிக்க நாடுகளையும் ஐக்கியப்படுத்துகின்ற சகோதரத்துவத்தின் ஞாபகசின்னமாக இந்தமகாலயத்தைக் கட்டியெழுப்பும்கருத்து மதிரித்நகரிலுள்ள இராசியப் பிரதிநிதிகளுள் ஒரு பாலாரின் உள்ளத்தில்பிறந்து விருத்தியடைந்து வரலாயிற்று. இந்த மகாலயத்தின்நாமம் ஸ்பானிய வெளிநாட்டுமந்திரியாரான திரு. ஆட்ராஜோ அவர்களால் தெரியப்படலாயிற்று. இதன் செலவுக்கென்று சகல லத்தீன்–அமெரிக்கநாடுகளும், ஸ்பானியபாஷை பேசும் நாடுகளும், போர்த்துக்கால், பிறேசில், பிலிப்பைன்ஸ்நாடுகளும் பணம் உபகரித்து வருகின்றன. லத்தீன் அமெரிக்க நாடு ஒவ்வொன்றும் அந்தந்தநாட்டிலே சிறப்பாக என்னபெயரால் தேவதாயார் வணங்கப்படுகிறாரோ அந்தந்தப் பெயருடன் இந்த மகாலயத்தில் ஒவ்வோர் சிற்றாலயத்தைக் கொண்டிருக்கும்.

### குருவா......சம்பாஷித்தால்......

"குருவானவருடன் சம்பாஷிக்கக் காணப்படுகிறஎவரும் அந்த இடத்திற்தானே யந்திரத்துப்பாக்கிகொண்டு சுடப்படுவர்" என்று சீனாவிலே வூச்சோமேற்றிராசனத்திலுள்ள மறினெல் மிஷன் ஸ்தானத்தின் வெளிப்புறத்தில் ஓர்விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. சீனாவிலே மிஷனரிமாரைக் கம்யூனிஸ்தர்கள் இம்சித்துத் துன்புறுத்துவது பற்றிய அநேக உதாரணங்களில் இதுவும் ஒன்றாகுமென நியூயோக்நகரிலுள்ள அச்சபைக்குருமாரின் தலைமைஸ்தானத்திலிருந்து வெளியான அறிக்கை தெரிவிக்கிறது. ஷான்ஷிநகரிலே எழுபது கத்தோலிக்க தொழிலாளிகள் திவ்வியபூசை காண்பதற்காக ஓர் ஞாயிற்றுக்கிழமை இடையிலே ஓய்வெடுத்ததற்காக நூற்றுக்கணக்கான நாட்களுக்குக் கட்டாயவேலைசெய்யத் தண்டனை விதிக்கப்பட்டார்கள். கன்ரன் நகரிலுள்ள கத்தோலிக்கரும், புரொட்டஸ்தாந்தரும் ஓர்தெய்வம் வேண்டுமென்று உணர்ந்தால், ஒன்றில் ஸ்ராலினை அன்றேல் லெனினைத் தங்கள்தெய்வமாகச் சிந்திக்கலாமென்று அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஹோப்பே மேற்றிராசனத்திலுள்ள 150 கோவில்களில் மூன்றேமூன்று மாத்திரம் பிரசித்தஆராதனைக்கு அனுமதிக்கப் பட்டிருக்கின்றன.

### 68 வயசில் குருப்பட்டம்

பிரித்தானிய அரசின் மாஜி இராசியப் பிரதிநிதிகளில் ஒருவரான திரு. சாள்ஸ் ஒக்ஸ்அவர்கள் தமது 68-ம் வயசிலே சமீபத்தில் றோமாபுரியிலுள்ள பீடாகுருமடத்திலே குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். இவர் சேர் அகுஸ்தஸ் ஒக்ஸ் அவர்களின் புதல்வர். இங்கிலாந்திலே பிரபல்யம்பெற்ற ஹறோ கல்லூரியிலே இவர் கல்வி பயின்றவர். அதில் இவர் சேரும்போது கீர்த்திவாய்ந்த வண. மாட்டின் ரேல் சுவாமியார் இன்னுமே அதில் படித்துவந்தார். அப்போதே பிரித்தானிய யுத்தகாலபிரதமரான திரு. வின்ஸ்ரன் சேர்ச்சில்அதிலிருந்துவெளி கொண்டார். 1920-ம் ஆண்டு இவர் சான்பிரான்சீஸ்கோநகரிலே பிரித்தா[illegible]றலாய் இருந்தபோது புரொட்டஸ்தாந்த சமயத்திலிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்க மறையைத் தழுவிக்கொண்டார்.

### பிறவிக்குருடான சுவாமியார்

ஓர் குருடரான வண. றேலன்ட் காம்பெல்சுவாமியார் கனடாதேச மொண்றியல் நகரிலே குருடர்களை வழிநடத்தும் தலைவராயிருக்கின்றார். தற்போது 35 வயசுடையவரான இவர் ஒருபோதுமே எதையும் பார்த்தறியார். பரிசுத்த ஸ்தானத்தினிடமிருந்து பெற்றுக்கொண்ட விசேஷ அனுமதியின் பேரிலே இவர் 1948-ம்ஆண்டு குருப்பட்டம்பெற்றுக்கொண்டார். அந்நகரிலேகுருட்டுஅன்பர்கள் சங்கவிசாரணைக் குரவராயிருந்து, அவர்களின் ஆத்மீகநலன்களைப் பரிவாகக் கவனிப்பதும், சீவனோபாயத்துக்கான தொழில் முயற்சிகளை அவர்களுக்குப் பயிற்றுவதும், அவர்களை வேலைகொள்ளுமாறு தொழில்முதலாளிகளையும், தங்கள் ஒழிவான நேரங்களிலே அவர்களுக்குத் துணைச்செய்யுமாறு மற்றவர்களையும் ஊக்கப்படுத்தி வருவதுமே இவரின்விசேஷ அலுவல்களாகும். குருடர்களின் குறிப்பாஷைஎழுத்து அச்சியந்திரசாலை ஒன்றை அமைப்பதற்கும், அவர்களுக்கெனப் பிராஞ்சியபாஷையிலே ஓர் பத்திரிகையை வெளியிடுவதற்குமாகச் சென்றநத்தார்விழாக் காலத்திலே இவர் மொண்றியல்பகுதியில் நத்தார் மரங்கள் விற்க 1,800 தொண்டர்களை ஒழுங்குபண்ணி நிதிசேகரித்திருக்கின்றார்.

### குடும்பசெபமாலைத் தளகர்த்தர்

முன்னர் ஓர்ஐரிஷ் சுரங்கத்தொழிலாளியாயிருந்த வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமியார் இற்றைக்குச் சிலவருடங்களுக்குமுன் க்ஷயரோகங்கண்டு மரணத்தை எதிர்நோக்கிக்கொண்டிருந்தார். அப்போது ஆஸ்பத்திரியிலே அவரைச்சந்திக்கப்போன வயதுசென்ற ஓர் குருவானவரது ஆலோசனையின்பேரிலே அவர் தேவதாயாரை மன்றாடி, தாம் புதுமையா[illegible]யுமிடத்து அமெரிக்க ஐக்கியதேசத்திலுள்ள ஒருகோடி குடும்பங்களிலும் குடும்பசெபமாலை செபிப்பதை அனுசரணைக்குக்கொண்டுவரத் தமதுசீவியத்தை அர்ப்பணஞ்செய்வதாக நேர்ந்துகொண்டார். தேவதாயார் அவரது மன்றாட்டைக் கேட்டருளினார். சிலதினங்களுக்குப்பின் பிடிக்கப்பட்ட எக்ஸ்–றே பிளேற்றுகள் அவரிலே க்ஷயரோகத்திற்குரிய அடையாளம் எதையுமே காண்பிக்கவில்லை. அதன்மேல் அவர் சேர்ந்துள்ள திருச்சிலுவைச்சபைச் சிரேஷ்டர்கள் அவர் தமது குடும்பசெபமாலைப் படையணியைத் தொடக்கிநடத்தித் தாம்செய்த நேர்த்தியை நிறைவேற்றுமாறு நியூயோக்கைச்சேர்ந்த அல்பனி நகருக்கு அவரை அனுப்பிவைத்தார்கள். இதுவிஷயமாய் றேடியோவை உபயோகிக்கும் யோசனை அவர்மனதில் திடீரென உதயமாகவே, அவர் ஹொலிவூட்டுக்குச்சென்று அங்கே பிங்குரொஸ்பிமுதலாம் பிரபல கத்தோலிக்க சினிமாநடிகர்களினதும், பிறநடிகர்களினதும்உதவியைப்பெற்றுக் கொண்டார். அதன்விளைவாய்ச் சமயறேடியோத் திட்டமாகிய "குடும்பதியேற்றர்"மூலம் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் லட்சக்கணக்கானோர் குடும்பசெபமாலையிலே ஈடுபட்டுவருகின்றார்கள்.

## திருப்பாடுகளின் காட்சி

### பேசாலை

———:———

இன்றையஉலகின் பலவித ஆபாசக்காட்சிகளுக்கு மாற்றுமருந்தாக இக்காலத்தில் நாம் காணவேண்டியதென்ன?

கிறீஸ்துநாதரின் திருப்பாடுகள் சம்பந்தமான காட்சிகளைக் காண்பதும், அவற்றைத் தியானிப்பதும், பாடுகளுக்குக்காரணமான பாவங்களை வெறுத்துத் தபஞ்செய்து சிலுவையின்பாதையில் நடப்பதுமே செய்யவேண்டியனவாகும்.

இவ்வித உயர்ந்தநோக்கை ஆதாரமாய்க்கொண்டு இவ்வருடம் இலங்கையிலே "பாஸ்" காட்சியால் பிரக்கியாதிபெற்றுவிளங்கும் பேசாலையிலே பிரமாண்டமான "பாஸ்"மண்டபத்தில் எங்கள்ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதரின் வாழ்க்கையோடு தொடர்பான சம்பவங்களும், ஈற்றில் திருப்பாடுகளின் காட்சிகளும் தத்ரூபமானமுறையில் பெரியவாரத்தில் (பங்குனி 21, 22, 23-ந்திகதிகள்) பத்திக்குரியமுறையில் காட்டப்படவிருக்கின்றன.

காதாற்கேட்பதைவிடக் கண்ணாற்காண்பதுமேல். எனவே கத்தோலிக்கமக்கள் தக்கஇத்தருணத்தை ஆதாரமாய்க்கொண்டு இலவசமான இக்காட்சிகளை நேரிற்கண்டு தங்கள்ஆத்துமசம்பந்தமாய் ஞானநன்மை தேடிக்கொள்வார்களாக.

கட்டளைக்குரு
பேசாலை

### சீனிக்கைத்தொழிற்சாலை

பொல்லனறுவைக் கமத்தொழில் நிலையத்திலே ஓர்ஆரம்ப சீனிக்கைத்தொழிற்சாலை அமைக்கப்பட்டு வேலை செய்துவருகின்றது. அப்பகுதியில் 200 ஏக்கர் நிலத்தில் கரும்புசெய்யப்படுகிறது. இத்தொழிற்சாலையில் சர்க்கரையைத்தவிரத் தினமும் 200 றாத்தல்சீனி செய்யப்படுகிறது. தற்போது இலங்கையில் விலைப்படுகின்ற பழுப்புச் சீனியிலும் இது எவ்வளவோ சிறந்ததாகும். அங்கு செய்யப்படும் சர்க்கரை ஒரு றாத்தல் 40 சதமாகவும், சீனி ஒருறாத்தல் 46 சதமாகவும் விலைப்படுகிறது. கரும்புச்செய்கையும், சீனிச்செய்கையும் ஆஸ்திறேலியமுறைகளின்படியே நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## தபசுகால ஞானஒடுக்கம்

பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவிலையும், சுண்டிக்குளி சஞ்சுவாம்கோவிலையுஞ்சேர்ந்த ஆடவர்களின் தபசுகால ஞானவொடுக்கம் வருகிற 11-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆரம்பமாகி அடுத்த 18-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை முடிவாகும். வண. எல். ஜே. அகஸ்ரீன் சுவாமியவர்கள் போதகஞ்செய்வார்.

## விசேஷ றெயின்வண்டி

ஈஸ்றர்விடுமுறை நிமித்தமாக இம்மாசம் 21-ந்திகதி புதன்கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விசேஷறெயின்வண்டி ஒன்றை றெயில்வே அதிகாரிகள் ஒழுங்குபண்ணியிருக்கின்றனர். இது அன்று மாலை 9-05 மணிக்குக் கோட்டைஸ்றேஷனிலிருந்து புறப்பட்டு, மறுநாட்காலை 7-35 மணிக்கு யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து பின்னர் 8-30 மணிக்குக் காங்கேசன்துறைபோய்ச்சேரும். இதிலே படுக்கைவசதிகள் இருக்கமாட்டா. ஆனால், அதிகமானோர் பிரயாணஞ் செய்வதற்கான இடவசதிகள் அமைக்கப்படும்.

## வடமாகாண ஏசன்றர்

வடமாகாண ஏசன்றராய் இருந்துவருகின்ற திரு. பி. ஜே. ஹட்சன் அவர்கள் அடுத்த சித்திரைமாசம் லீவிலே இங்கிலாந்து செல்லவிருக்கிறாரென அறிகின்றோம்.

## நீதிபதிகளின் மாற்றம்

பருத்தித்துறை டிஸ்திறிக்நீதிபதியான திரு.பி.ஸ்ரீ ஸ்கந்தராஜா அவர்கள் கொழும்புப் பிரதம மஜிஸ்றேற்றாகவும், பாணந்துறை மஜிஸ்றேற்றான திரு. ஏ. டபிள்யு. நடராஜா அவர்கள் பருத்தித்துறை டிஸ்திறிக்நீதிபதியாகவும், பருத்தித்துறை அத்வக்காத்து திரு. கே. ஜெயக்கொடி அவர்கள் பாணந்துறை ஐக்றிங் மஜிஸ்றேற்றாகவும் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கிறார்கள்.

## மன்னார் உதவிஏசன்றர்

மன்னார் உதவிஏசன்றராய் இருந்துவந்த திரு. ஈ. பி. திசைவீரசிங்க அவர்கள் இலங்கை அரசாங்க றெயில்வேய்ப் பிரதம பரிபாலன அதிகாரியாகவும் இவரிடமாகக் கல்விமந்திரியாரின் நிரந்தரஉதவிக் காரியதரிசியாக இருந்துவந்த திரு. கோகர்லி மொறகொட அவர்கள்மன்னார் உதவிஏசன்றராகவும், நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றனர்.

## உதயதாரகைப் பத்திராதிபர்கள்

அநேகவருடங்களாக உதயதாரகையுடன் சம்பந்தப்பட்டு உழைத்துவந்த கனம். ஜி. டி. தோமஸ் போதகர் அவர்கள் பத்திராதிபர் பதவியிலிருந்து விலகிக்கொண்டமையால், அதன் ஆங்கில பத்திராதிபராகத் திரு. லேமன் எஸ். குலதுங்கம் அவர்களும், உதவிப்பத்திராதிபராகக் கனம். ஜே. டபிள்யு. ஏ. கதிர்காமர் போதகரும், தமிழ்ப்பத்திராதிபராகக் கனம். ஜே. ஜே. இரத்தினராசா போதகரும், உதவிப்பத்திராதிபராகக் கனம். ரி. ஏ. பென் போதகரும் நியமனஞ் செய்யப்பெற்றிருக்கிறார்கள்.

## ஊர்காவற்றுறைமுகம்

பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள் சபை சென்றபுதன்கிழமை திரு. அல்பேட் பீரிஸ்அவர்கள் தலைமையில்கூடியது. அதிலே, யாழ்ப்பாணக் குடாநாட்டில் துறைமுகம்ஒன்றைத்திறப்பது பற்றித் திரிகோணமலைப் பிரதிநிதியான திரு. எஸ். சிவபாலன் அவர்கள் கேட்ட கேள்விஒன்றுக்குப் போக்குவரத்து மந்திரியாருக்குப்பதில் இராசாங்கமந்திரியார் திரு. ஏ. ஈ. குணசிங்க அளித்த பதிலிலே, தொண்டைமானாறு ஆழமில்லாததால் அதில் துறைமுகம் திறக்க முடியாதென்றும், இதுவரை நடத்திய பரிசோதனைகளிலிருந்து ஊர்காவற்றுறைதான் துறைமுகத்துக்குச் சிறந்தவிடமாகக் கண்டறியப்பட்டிருக்கிறதென்றும் தெரிவித்திருக்கின்றார்.

## சரிதாசிரியருக்கு ஞாபகசின்னம்

இலங்கையிலே கீர்த்திவாய்ந்தசரிதாசிரியராய் விளங்கியிருந்து காலஞ்சென்றவண. எஸ். ஜி. பெறேரா சுவாமியவர்கள் இந்நாட்டுக்குச்செய்த அருஞ்சேவையைப்பாராட்டி அதனை என்றைக்கும் நிலைநாட்டும் ஓர் ஞாபகசின்னத்தை அமைக்கும் நோக்கமாகச் சென்ற 25-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் சர்வகலாசாலையிலே திரு. எஸ். ஏ. பேக்மன், எம். பி. அவர்கள் தலைமையிலே பிரபலஸ்தர்களின் கூட்டமொன்று நடந்தேறியது. அதிலே செனற்சபையின் தலைவரான சேர் ஜெறுட் விஜயக்கூன் அவர்கள் பேசியவிடத்து, இலங்கையின் மகாப்பெரிய சரிதாசிரியர்களில் ஒருவராய், பேர்பெற்ற ஓர் கல்விமானுயிருந்து காலஞ்சென்ற வண. எஸ். ஜி. பெறேரா சுவாமியவர்களுக்கு ஞாபகசின்னம் ஒன்று அமைக்கப்படவேண்டுமென ஏலவே தீர்மானிக்கப்பட்டுவிட்டதெனக் கூறினின்றார். ஈற்றிலே சிலாப மேற்றிராணியாண்டவரது ஆலோசனையின்பேரில், இலங்கைச் சர்வகலாசாலையிலே வித்தியாபட்டம்பெற்றபின் இலங்கைச்சரித்திரத்தில் இரண்டுவருடகாலம் ஆராய்ச்சிசெய்வதற்கான வித்தியாவெகுமதி ஒன்று ஆக்கப்படவேண்டுமென்றும், ஒருலட்சம் ரூபா நிதிசேகரிக்கப்பட்ட பின்னரே இந்தவித்தியா வெகுமதி அளிக்கப்படவேண்டுமென்றும் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. ஈற்றில் டக்றர் ஜி. சி. மென்டிஸ் அவர்களைக் காரியதரிசியாகவும், செனற்றர் இராசவாசல் முதலியார் எஸ். ரி. பி. றெட்றிக்கோ அவர்களைப் பொக்கசாகவும், பிரமுகர்கள் பதின்மரைஅங்கத்தவராகவும் கொண்டு ஓர் நிர்வாகசபை ஆக்கப்படலாயிற்று.

## வாழ்க்கைச்செலவு கூடியது

இலங்கையிலே சென்ற மாசிமாதத்தில் வாழ்க்கைச்செலவு 284 புள்ளிகளாக அதிகரித்திருக்கிறது. சென்ற தைமாசத்திலே 281புள்ளிகள். இதற்கு முன் சென்றபுரட்டாசியில்தான் வாழ்க்கைச்செலவுப்புள்ளிகள் வெகுவாக அதிகரித்திருந்தன. அவற்றிலும்பார்க்கச் சென்றமாதம் ஒருபுள்ளி அதிகரித்திருக்கிறது. அதனால் 100 ரூபாவும் அதற்கு மேலும் சம்பளம் பெறுகிறவர்களுக்குச் சென்றமாசியிலே பஞ்சப்படியாகத் 94 ரூபா 30 சதம் கிடைக்கவிருக்கிறது.

## புதியஉள்நாட்டு மந்திரியார்

லண்டன்நகரிலே இலங்கையின் ஹைகம்மிஷனர் பதவியைவிட்டுவிலகிய சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் சென்ற வியாழக்கிழமை 'பி. ஓ. கார்த்தேஜ்'எனும் கப்பலிலே கொழும்பு வந்துசேர்ந்து, செனற்சபை அங்கத்தவராகவும், உள்நாட்டுமந்திரியாராகவும், செனற்சபை முதல்வராகவும் பதவிகள் ஏற்றிருக்கின்றார். இவர் சர்வதேச நிலைமைபற்றிக்கூறியதாவது: சரித்திரத்தை ஆராய்வாகக் கவனித்தால் தற்போது மேல்நாடுகளிடையே ஏற்பட்டுள்ள யுத்தகளபாட உற்பத்திப் போட்டியானது ஈற்றிலே யுத்தத்தில்தான்முடியுமென்றே சொல்லவேண்டும். ஆனால், அற்புதங்கள் நிகழலாம். வடஅத்திலாந்திக் ஒப்பந்தநாடுகள் தங்கள்திட்டங்களைக் காலதாமசமின்றி நடைமுறைக்குக் கொண்டுவந்துவிடுமானால், யுத்தமே மூளாதென்றுசொல்லலாம். எந்தநாடுமே யுத்தத்தைவிரும்பவில்லை. வடஅத்திலாந்திக் ஒப்பந்தநாடுகள் பாதுகாப்புகளைப் பலப்படுத்திவிட்டால் எந்தநாடும் அவசரப்பட்டுப் போரில் இறங்காது. ஆனால், இந்தநாடுகள் தயாராகுமுன் யுத்தம்ஆரம்பமாகிவிடுமாஎன்பதுதான் இப்போதைய கேள்வியாகும். ஆனால், அம்மாதிரிநிகழுமென்று நான் நம்பவில்லை. கீழ்நாடுகளிலே கம்யூனிஸம் பரவாமல்தடுக்க அவைகளுக்குள்ளமருந்து ஒன்றேயாகும். வறுமை, பசி, பிணியாகியமூன்றையும் ஒழிக்க இடைவிடாது போர் நிகழ்த்துவதே அதுவாகும். ஒழுங்குமுறையான அரசாங்கமும், மனத்திருப்தியுடன்விளங்கும் மக்களும் சமாதானப்போராட்டத்திற்குப் பெரிதும் உதவிபுரியக்கூடியவர்கள் என்பதே

## பிரதமரின் போன்மதி

அழுத்துப்போலைக் கிராமாபிவிர்த்திச்சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழா சென்றவெள்ளிக்கிழமை நிகழ்ந்தது. அதிலே பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்கள் தமது சொற்பொழிவிலே குறிப்பிட்டதுவருவாறு: "தயைதாட்சணியமின்றி எல்லோரையும் சமமாகவே நான் நடத்துவேன். உங்கள் சங்கம் எனது தேர்தல்தொகுதியில் இருந்தபோதிலும் நான் உங்களுக்கெனப் பிரத்தியேகமாய் உதவியளிக்க முடியாது. பிரதமர் ஒருவர் விசேஷ ஆதரவு அளிப்பதானது, ஒருசமூகத்தின் முன்னேற்றத்தைப் பின்னடையச்செய்யும். பொதுசனங்கள் தங்கள் பொறுப்புகளை உணராமல் தங்கள் தேவைகளையும், உரிமைகளையும்பற்றி ஆரவாரஞ் செய்கின்றார்கள். கிராமச் சங்கங்களுக்குச் சாத்திமான ஒவ்வோர்உதவியும் அரசாங்கத்தினிடமிருந்து கிடைக்கும். ஆனால், அவைகள் தங்களுக்குத் தாங்களாகவே உதவி செய்துகொள்ள வேண்டும். அவைகள் 'தன்கையே தனக்குதவி' என்ற கொள்கைப்படி உதவிபுரியச் சக்தியுள்ளனவாய் இருக்கவேண்டும்"

## மற்றோர் புராதனவாவி

வடமத்திய மாகாணத்திலுள்ள ஹுருலுவீவா எனும் புராதனவாவியைத் திருத்தியமைக்கும் திட்டத்தின்கீழ் இரண்டாயிரம் ஏக்கர்நிலம் காடுவெட்டித் துப்புரவாக்கப்பட்டிருக்கிறது. இந்தப்பகுதியைக் கமக்காரரின் குடியேற்றபகுதியாகமாற்றி வளமடையச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தஇரண்டாயிரம் ஏக்கரிலும் தீவிரமாக வீடுகள் கட்டி அடுத்தவருடத்திலே கமக்காரருக்குக் காணிகள் பகிர்ந்துகொடுக்கப்படும். அதன்மேல் ஒவ்வோர் வருடமும் இரண்டாயிரம் ஏக்கர்வீதம் ஐந்துவருடங்களில் பதினாயிரம் ஏக்காநிலம் நெல்வேளாண்மைக்குத் தயாராகும்.

## கல்லோயா விமானசேவை

கொழும்புக்குவெளியே கல்லோயாவிலுள்ள அம்பாரை விமானநிலையமும் விரைவிலே அதிகம்விசேஷப்பட்ட தொன்றாய் வரும்போலிருக்கிறது. ஒழுங்காக அங்கு ஆகாயப்பிரயாணசேவை நடைபெறத்தொடங்கிய பின்னர் தினமும் கூடியவீதமாய் 50 பேர்வீதம் வருடமொன்றுக்குப் பதினாயிரம்பேர் ஆகாயமார்க்கமாய்ச் சென்று கல்லோயாவைத் தரிசிப்பார்களென மதிப்பிடப்படுகிறது. தற்போது ஆகாயவிமானங்கள் இறங்குவதற்கு 1,500 யார் நீளமானநிலமே சித்தஞ்செய்யப்பட்டுள்ளது. இம்மாச நடுக்கூற்றிலே பிரதமரும், கமத்தொழில் மந்திரியாரும் ஆகாயவிமானத்தில் சென்று கல்லோயாவைத் தரிசிப்பதோடு கொழும்புக்கும் கல்லோயாவுக்குமிடையே கிரமமான ஆகாயப்பிரயாணசேவை ஆரம்பமாகும்போல் இருக்கிறது.

## மேலும் ஒருமாதத்தவணை

பாடசாலைகள் இலவசகல்வித்திட்டத்திற் சேர்ந்துகொள்ள வேண்டிய கடைசித்தினம் சென்றமாசிமாதம் 28-ந்திகதியாகும். அரசாங்கஉதவிப் பணம்பெறும் சுவபாஷாபாடசாலைகள், ஆங்கிலபாடசாலைகளாய் அன்றுவரை இலவசகல்வித்திட்டத்தில் சேர்ந்துள்ள பாடசாலைகள் 1,650. ஆனால், இந்தக் காலஎல்லை தற்போது பங்குனிமாதம் 31-ந்திகதிவரையில் நீடிக்கச்செய்துவிடப்பட்டிருப்பதாகச் சென்றபுதன்கிழமைசெனற்சபைக் கூட்டத்திலே திரு. எல்.எல். ஹண்டர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

# நானா சங்கதிகள்

—கி. மு. 2737-ம்ஆண்டிலே ஷென்நங்என்னும் சீனச்சக்கிரவர்த்தி ஆட்சி செய்துவந்தகாலத்திலேசீனர்கள்தேநீர் பருகியதாகப் பாரம்பரியங் கூறுகின்றது. ஆனால் தேயிலை கண்டுபிடிக்கப்பட்டதென்பதற்கான நம்பத்தக்கவருடம் கி. பி. 350-ம் ஆண்டேயென அறியப்படுகிறது. இந்த ஆண்டிலே கூப்போஎன்ற சீனஎழுத்தாளர் புராதன சீனஅகராதிஒன்றில் தேயிலையைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

—பிரித்தானிய-பிரான்சிய அரசுகளின் ஐக்கியத்துக்காகப் பிரித்தானிய யுத்தகால பிரதமரான திரு.வின்ஸ்ரன் சேர்ச்சில்அவர்கள் 1940-ம் ஆண்டு எடுத்தாண்ட சிறந்த பிரேரணை அப்போது அங்கீகரிக்கப்பட்டிருக்குமானால் இன்றுஐரோப்பா ஐக்கியப்பட்டிருக்கும்; உலகத்துக்கும் நம்பிக்கை உண்டாகியிருக்குமென்று பிரான்சிய மாஜிபிரதமரான எம்.போல் றேய்னோஅவர்கள் சமீபத்தில் கொண்டாடப்பெற்ற "உலக சகோதரத்துவவார"த்தில் கூறியிருக்கின்றார்.

—அமெரிக்கபிரசாதிபதியின்விசேஷ்துணைவரான திரு. அவெறல் ஹரிமன் அவர்கள் சிக்காகோநகரில் பேசியபோது, ருஷியாவின் கொடுங்கோன்மையைஎதிர்த்துச் சுதந்திரஉலகம் மூன்றாவது உலகயுத்தம்ஒன்று இல்லாமலே வெற்றிகொள்ளுமென்றும், தாம் ஸ்தானிகராக மஸ்கோவிலிருந்து திரும்பியபின் எக்காலத்திலும்பார்க்க இப்போது வெற்றியில் அதிகநம்பிக்கை கொண்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

—அமெரிக்க ஐக்கியதேசத்திலே சென்ற 1950-ம்ஆண்டில் வளர்ந்தவர்களான காப்பிரிகளாய்ப் 10,092 பேர் மனந்திரும்பிக் கத்தோலிக்கராயிருக்கின்றார்கள். சென்றவருடத்திலே காப்பிரிகளான கத்தோலிக்கரின் தொகை 20,000 பேரால் அதிகரித்து 3,98,111 பேராகியிருக்கிறது. சென்ற வருடத்திலே இவர்களுக்கெனப் பதினேழு புதியகோவில்கள் திறக்கப்பட்டுள்ளன.

—சுவிற்சர்லாந்த அரசு தனது பாதுகாப்புக்கென்று பிரித்தானியிலே 17 கோடியே 50 லட்சம் பிராங்கிலை கொடுத்து 150 ஜெற்போர்விமானங்களை வாங்குகின்றது. இவைகள் 'டேஹவிலன்ட்' விமான இனத்தைச் சேர்ந்தவைகள். இவற்றைவாங்க அது செலவிடும்பணம் அதன் 150 கோடி பிராங் ஆயுதசுவீகாரணத்தில் அடங்கமாட்டாது.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரிசுத்த பாத்திமாமாதா, அர்ச். சூசையப்பர், பொம்பேயி இராக்கினி, அர்ச். அந்தோனியார், அர்ச். தீத்தம்மாள் இவர்களின்மன்றாட்டாலும், எனது சகோதரியின் கழுத்திலிருந்தநோய் சத்திரசிகிச்சைமூலம் குணமாகிப் பூரணசுகம் கிடைத்தது. இருதயநாதருக்கும், மேற்படி அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் என்றும் என்நன்றி உரியது. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கின்றேன்.

Mrs. N. செபஸ்தியாம்பிள்ளை

சில்லாலை

## கல்விமந்திரியார்

கல்விமந்திரியாரான திரு. ஈ. ஏ. நுகவெலஅவர்கள் ஐந்துமாதவிடுமுறைபெற்றுச் சென்ற 1-ந்திகதி புதன்கிழமை இங்கிலாந்துக்குச் செல்லுகின்றார். அதனால் அவரது பாராளுமன்றக் காரியதரிசியும், வட்டுக்கோட்டைப் பிரதிநிதியுமான திரு. கே. கனகரத்தினம் அவர்கள் ஐக்றிங் கல்விமந்திரியாராக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

பங்குனிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| 9 | வெ | அ. பிராஞ்சீஸ்கம்மா | (வெ) |
| 10 | சனி | அ. 40 வேதசாட்சிகள் | (சி) |
| 11 | ஞா | திருப்பாடுகளின் ஞாயிறு | (ஊ) |
| 12 | திங் | அ. மகாகிறகோரி | (வெ) |
| 13 | செ | அ. எயுப்பிருசியம்மாள் | (ஊ) |
| 14 | புத | அ. மத்தில்தம்மாள் | (ஊ) |
| 15 | வியா | அ. லொஞ்சினுர் | (ஊ) |


சத்தியவேத

# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
பங்குனி மாதம் 8-ந் திகதி


## அச்சுப்பிரசுர ஞாயிறு

இம்மாசம் 11-ந்திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண மேற்றிராசனமுழுவதிலும் கத்தோலிக்க அச்சுப்பிரசுரஞாயிருக அனுசரிக்கப்படவிருக்கிறது. அச்சுப்பிரசுர ஞாயிறை அனுசரிப்பதின் உன்னத லட்சியமென்ன? கத்தோலிக்கமக்களிடையே நல்வாசினை அதிகம்விருத்தியடையும்படியாகக் கத்தோலிக்க அச்சுப்பிரசுரங்களாகிய பத்திரிகைகள், புத்தகங்கள் ஆதியவற்றைப் பரப்புவதும், அவ்வாறு பரப்புதற்கான இயக்கங்களுக்கு அடியிடுவதுமேயாகும். இன்றைய உலகில் அச்சியந்திரங்களிலிருந்து புற்றீசல்கள்போல எண்ணிறந்த பத்திரிகைகளும், புத்தகங்களும் வெள்ளப்பெருக்கென வெளிவந்து மிகமலிவாக விலைப்பட்டுவருகின்றன. மக்களிடையே பத்திரிகைகள், புத்தகங்கள் ஆதியவற்றைப் படிப்பதில் மிகுந்தஆர்வம் ஏற்பட்டிருக்கும் இந்தநூற்ருண்டிலே, நன்மைபயப்பன இவை, தீமைவிளைப்பன இவைஎன்ற பேதமின்றிக் கண்கண்டதையெல்லாம், கையிலெடுத்ததையெல்லாம் படித்துப்படித்துக் கெட்டழிந்துபோவார் எண்ணிலடங்காதோரே. கடவுளில்லையெனச் சாதிக்கும் நாஸ்திகபத்திரிகைகள், புத்தகங்களாலும், ருஷிய பொதுமடைமைக் கொள்கையைப்பரப்பும் கம்யூனிஸ்த பத்திரிகைகள், புத்தகங்களாலும், சனசமூக சன்மார்க்க ஒழுங்குமுறைகளைப் புரட்டும் சதிமோசமான பத்திரிகைகள், புத்தகங்களாலும், சிற்றின்பத்துக்கேதுவானசீர்கெட்ட பத்திரிகைகள், புத்தகங்களாலும், உலகமேசதம், அதுவேமனிதனின் கதியென்று மதியீனமாகப்புகட்டும் லோகாயதபத்திரிகைகள், புத்தகங்களாலும், மற்றும் இவைபோன்றவற்ருலும் அம்மமமா! இன்று தேசங்கள்தோறும்கெட்டழிந்துகொண்டிருக்கும் மக்களைநினைக்கும்போது மனம் திக்கிடுமன்ருே! கத்தோலிக்கமக்களாகிய நாம் இத்தகைய ஆன்மசரீர கேடுகள்நிறைந்த ஆபாசமான பத்திரிகைகளையும், புத்தகங்களையும் விலக்குவதுடன்நின்றுவிடாது, ஆன்மசரீர நன்மைகளுக்கேதுவான பத்திரிகைகள், புத்தகங்களை வாங்கிப்படிப்பதும் மிகஅவசியமாகும். அங்ஙனம்வாங்கிப் படிக்கவைக்கும் நோக்கமாகவே அச்சுப்பிரசுர ஞாயிறு வருடந்தோறும் அனுசரிக்கப்படுகிறது. ஆதலால் கத்தோலிக்கமக்கள் ஒவ்வொருவரும் இவ்வரியசந்தர்ப்பத்தை இயன்றளவு பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஞானவாசினைக்குரிய புத்தகங்களைத் தினமும் வாசிப்பதாக ஒவ்வொருவருமே உறுதிசெய்யவேண்டும். குறைந்தபட்சம் ஞானவாசினைக்குரியஓர்புத்தகத்தையாவது அன்று ஒவ்வொருவரும் வாங்கிக்கொள்ளவேண்டும். ஞானவாசினையை விருத்திசெய்வதில் கத்தோலிக்கசேவையிலே ஈடுபட்டுள்ளவர்களும, பத்திக்கூட்டங்களைச் சேர்ந்தவர்களும், மற்றும்அபிமானிகளும் ஞானவாசினைக்குரியபுத்தகங்களைக் கிராமங்கள்தோறும், வீடுகள்தோறும் கொண்டுசென்று அவைகளை விற்பனைசெய்து பரப்புதற்கான ஒழுங்குகளைச் செய்யவேண்டும். அன்ருேடுமாத்திரம் இந்தவேததொண்டு நின்றுவிடாது வாரந்தோறும் நடைபெறுதற்கான திட்டங்களை வகுக்கவேண்டும். விசேஷமாக இலங்கையில் பிரசுரமாகும் ஒரேயொரு தேசிய கத்தோலிக்க தமிழ்ப்பத்திரிகையாகிய நமது “சத்தியவேத பாதுகாவல”னை இலங்கைமுழுவதிலுமுள்ள கத்தோலிக்கதமிழ்மக்கள் அனைவரும் ஓர்கருந்தனமாக மதித்து அதனைப்பரப்புவதிலும், அதற்குப் புதியசந்தாதாரர்களைச் சேர்ப்பதிலும், அதனையாவரும் கருத்தாகவாசிக்கச்செய்வதிலும் கரிசனையெடுத்து இந்த அச்சுப்பிரசுரஞாயிறை விசேஷவிதமாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இதுவிஷயமாய் இப்பத்திரிகையின் மற்ருேர்பகுதியிலே செவாலியர் எஸ். அருளானந்தம்அவர்களால் எழுதப்பெற்று வெளிவரும் அருமையானகட்டுரையை அன்பர்கள் எல்லாம் ஆர்வத்துடன்படித்து ஆவனசெய்வார்களென ஆவலுடன் எதிர்பார்க்கின்ருேம்.

## பரிசுத்த யூபிலிவருடம் 1950 — 1951.

### பரிசுத்தவருட வினுவிடைகள்

1. “யூபிலி”ப்பலன் என்பது என்ன?

பரிசுத்தவருடத்தில் விதிக்கப்பட்டநிபந்தனைகளை நிறைவேற்றும் விசுவாசிகளுக்குப் பரிசுத்த பாப்பாண்டவரால் அருளப்படும் விசேஷ பரிபூரணபலனே “யூபிலி”ப்பலன்.

2. யூபிலிவருடம் ஏன் பரிசுத்தவருடம்என அழைக்கப்படுகின்றது?

கத்தோலிக்கரின் அர்ச்சிப்புக்கு மிகவும்பிரயோசனமானதால், அது “பரிசுத்தவருடம்” என அழைக்கப்படுகின்றது.

3. 1950-ம்ஆண்டுப் பரிசுத்த வருடத்தைப் பரிசுத்தபிதா பன்னிரண்டாம்பத்திநாத பாப்பாண்டவர் எப்படி விபரித்திருக்கின்றார்?

பரிசுத்தபிதா அதை “மகாமனந்திரும்புதலினதும், பூரண மன்னிப்பினதும்” வருடமென அழைத்திருக்கின்ருர்.


இலங்கையில் வெளியாகும்
ஒரேயொரு கத்தோலிக்க தமிழ் வாரப் பத்திரிகை இதுவே.

# சத்தியவேத பாதுகாவலன்

Estd. 1876.

இலங்கை

| | |
|---|---|
| வருஷம் | 5-50 |
| அரை வருஷம் | 3-00 |

இந்தியா மற்றும் தேசங்களுக்கு

| | |
|---|---|
| வருஷம் | 6-00 |
| அரை வருஷம் | 3-25 |

வருடசந்தா முற்பணமாகக் கட்டவேண்டும்

விளம்பரங்களுக்கும், கையொப்பங்களுக்கும், மனேஜர், அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம் என்று எழுதவேண்டும்.


### யூபிலிவருடப் பலனடைய நிபந்தனைகள்

1. நல்ல பாவசங்கீர்த்தனம் செய்தல்.
2. தேவநற்கருணை உட்கொள்ளுதல்.
3. அந்தந்தப் பங்கு விசாரணையிற் குறிக்கப்பட்ட கோவில்களைச் சந்தித்தல்.
4. ஒவ்வோர் சந்திப்பின்போதும் சொல்லப்படவேண்டிய செபங்கள்:
   ஐந்து பா. பிரி. திரி.
   ஒரு பா.. பிரி. திரி. (பரிசுத்த பாப்பானவரின் கருத்துக்காக)
   விசுவாச மந்திரம்.
   மூன்று பிரியதத்தமந்திரம்.
   ஒருமுறை “சமாதானத்தின் இராக்கினியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.”

### கிருபைதயாபத்து மந்திரம்

கிருபை தயாபத்துக்கு மாதாவாய் இருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க!—எங்கள் சீவமே, எங்கள் மதுரமே, எங்கள் தஞ்சமே வாழ்க!—பரதேசிகளாய்இருக்கிற நாங்கள் ஏவையின்மக்கள் உம்மைப்பார்த்துக் கூப்பிடுகிருேம்.—இந்தக் கண்ணீர்க்கணவாயிலிருந்து பிலாபித்துஅழுது உம்மையே நோக்கிப் பெருமூச்சு விடுகிருேம்.—ஆகலால், எங்களுக்காக வேண்டி மன்ருடுகிற தாயே! உம்முடைய தயாபரமுள்ள திருஇரக்கக் கண்களை எங்கள்பேரிலே திருப்பியருளும்.—இதுவன்றியே நாங்கள் இந்தப் பரதேசங் கடந்தபிற்பாடு உம்முடைய திருவயிற்றின் கனியாகிய யேசுநாதருடைய பிரத்தியட்சமான தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும்—கிருபாகரியே! தயாபரியே! பேரின்பரசமுள்ள கன்னிமாமரியே! சருவேசுரனுடைய அர்ச்சியசிஷ்ட மாதாவே!

கீழ்க்காணும் செபத்தையுஞ் சொல்லலாம்.

### பரிசுத்த வருடச் செபம்

நித்தியரும், சருவ வல்லபருமான தேவனே! பரிசுத்தவருடப் பேருபகாரத்திற்காக எங்கள் முழுஇருதயத்துடனும் உமக்கு நன்றிகூறுகிருேம். சகலமும்அறிந்து மனிதரின் இருதயங்களைத்தேடி அவைகளை வழிநடத்தும் பரலோகபிதாவே! வரப்பிரசாதமும், இரட்சணியமும் கிடைக்கும் இக்காலத்தில் மனிதரை உமது திருக்குமாரனின் ஏவுதல்களுக்கு இசையப்பண்ணியருளும். எல்லோருக்கும் இருதயசுத்திகரிப்பும், அந்தரங்க சீவியத்தின் மனப்பாக்கியமும், பாவத்திற்குப்பரிகாரமும் நிறைந்ததாக இப்புண்ணியவருடம் விளங்குவதாக. அன்றி [illegible] மனந்திரும்புதலினதும், பாவமன்னிப்பினதும் வருடமாகவும் இருப்பதாக. விசுவாசத்தின்நிமித்தம் பாடுபடுவோருக்கு உமது திடசித்தத்தைக் கொடுத்து, அவர்கள் யேசுநாதருடனும், அவரது திருச்சபையுடனும் பிரிவின்றி ஒன்றித்திருக்கப்பண்ணும் வரத்தை ஈந்தருளும். ஆண்டவரே! உமதுதிருக்குமாரனின் பதிலாளியாய் இருக்கும் பரிசுத்தபாப்பாண்டவரையும், சகல மேற்றிராணிமார், குருமார், சந்நியாசிகள், விசுவாசிகள் சகலரையும் பாதுகாத்தருளும். உமது பகைவரின் ஆவேச எதிர்ப்பு அற்றுப்போகும்வண்ணம் குருமாருக்கும், விசுவாசிகளுக்கும், பாலர், விருத்தர் முதியோர்முதலாம் எப்பருவத்தினர்க்கும், இணைபிரியா மன ஒன்றிப்பையும், நேசபாசத்தையும் உவந்துகொடுத்தருளும். மனுப்பிறவிகள் என்றுதானும் கூறமுடியாமல் வறுமையிலும், நிர்ப்பாக்கியத்திலும் அமிழ்ந்திருக்கும் கதியற்ற பலமனுக்கள்மட்டிலே சகலரும் அன்புகூரும்வண்ணம் உம்முடைய வரப்பிரசாதம் எல்லாமனிதர் மனதுகளிலும் நேசத்தை மூட்டிவிடுவதாக. உம்மைத் தங்கள் “பிதா”வாக அழைப்போர் தம்மனதில் கிரியையினுலும், உண்மையினுலும் விளங்கும் சமுதாய நீதியையும், சகோதர அன்பையும் விரும்பிப் பசிதாகம்கொள்ளச் செய்தருளும். ஆண்டவரே, எங்கள்காலத்தில் மனச்சமாதானமும், குடும்பசமாதானமும், தேசசமாதானமும், உலக சமாதானமும் உண்டாகச் செய்தருளும். உமது திருச்சுதனின் சீவியமுன்மாதிரிகையினுலும், பாடுகளினுலும் அர்ச்சிக்கப்பட்டபூமியில் சமாதானத்தின் அறிகுறியான வானவில் ஒளிவிட்டு விளங்கச் செய்தருளும். எல்லாத்துக்கதுயரங்களிலும் ஆறுதல் அருளும் தேவனே, எங்கள் துன்பங்களோ அதிகமானவை. எங்கள் குற்றங்களோ பாரதூரமானவை. எங்கள் தேவைகளோ எண்ணிறந்தவை. ஆனுலும் உம்மிடத்தில் நாம்வைத்திருக்கும் நம்பிக்கையோ அளவற்றது. நாங்கள் அபாத்திரர்என்ற எண்ணத்துடன் எங்கள் கதியை உமதுதிருக்கரங்களில் ஒப்படைத்து, எங்கள் எளியசெபங்களைப் பரிசுத்த தேவதாயாரினதும், சகலஅர்ச்சியசிஷ்டர்களினதும் மன்ருட்டுப்பலன்களுடன் சேர்த்து உமக்கு ஒப்புக்கொடுக்கிருேம். வியாதிக்காரருக்கு ஆரோக்கியத்தையும், தேவசித்தத்திற்குப் பணிந்தமனதையும், வாலிபருக்கு விசுவாசத்தினுல் வரும் தைரியத்தையும், கன்னியர்களுக்குக் கற்பென்னும் கொடையையும் தந்தருளும். பிதாக்களுக்குச் செல்வத்தையும், அவர்கள் குடும்பங்களுக்குப் பரிசுத்ததனத்தையும், மாதாக்களுக்குத் தங்கள்பிள்ளைகளை உத்தமவழியில் பயிற்றிவரும் வேலையில் அனுகூலத்தையும், அனுதைகளுக்கு அன்பு நிறைந்த ஆதரவையும் கொடுத்து, அகதிகளும், மறியற்காரரும் தங்கள் தாய்நாடு சேரப்பண்ணியருளும். முடிவில்லாத மோட்சபாக்

## பாடசாலைக்கோணம்

### குடிசனமதிப்பு — 1951

1951-ம் ஆண்டு புரட்டாசி மீ. எடுக்கப்படவிருக்கும் குடிசன மதிப்புக்கு உதவிபுரியக் கணக்கெடுக்கும் பெண்மணிகள் தேவைப்படுகிறார்கள். எமது பாடசாலைகளிற் படிப்பிக்கும் ஆசிரியைகள் அதில் பங்குபற்றுதல் உசிதமென வடமாகாண வித்தியாதிகாரி தெரிவிக்கிறார். எனவே இதில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியைகள் தாமதமில்லாது எமக்கு அறிவிக்கும்படி கேட்கப்படுகிறார்கள்.

இதுசம்பந்தமான விபரங்களை, வித்தியாதிகாரியால் தலைமைஆசிரியர்களுக்கு அனுப்பப்பட்ட சுற்றுநிருபத்தில் காணலாம்.

G. M. R. C. S.

### அர்ச். அந்தோனியார் கல்லூரி
ஊர்காவற்றுறை

"நமது கல்விக்கழகம் ஸ்தாபகமாகி எண்பதுவருட மாகிறது. ஆனால், கடந்தபன்னிரு வருடங்களுக்கிடையிலே அதன்வளர்ச்சி துரிதமடைந்துள்ளது. இந்தக்கழகத்தின் அதிபராயிருந்து, இதன்வளர்ச்சியினதும், விருத்தியினதும் சகாப்தத்தை ஆரம்பித்து இத்தகையஉயர்ச்சிக்கு இதனை கொணர்ந்தவரான காலஞ்சென்ற வண. யோசெவ் சுவாமியவர்களின் ஞாபகார்த்தமாக இந்தப்புதியகட்டடத்தை நாம் அர்ப்பணஞ்செய்வது சாலச்சிறந்ததாகும்" என்று ஊர்காவற்றுறை, அர்ச். அந்தோனியார்கல்லூரி அதிபரான வண. எஸ். நிக்கொலாப்பிள்ளை சுவாமியவர்கள் அக்கல்லூரியிலே யோசெவ்சுவாமியாரின் ஞாபகார்த்த கட்டடத்துக்கு அஸ்திவாரக்கல்நாட்டும்படியாக யாழ்ப்பாணமேற்றிராணியாராகிய மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர்அவர்களைக் கேட்டுக்கொள்கையில் கூறிநின்றார்.

ஆண்டவர்அவர்கள் அஸ்திவாரக்கல் நாட்டிவைத்துப் பேசுகையில், நீங்கள் நெடுங்காலம் ஆசித்திருந்த அரசியல் லட்சியங்களை அடைந்துகொள்வதற்கான உங்கள்அபிவிர்த்தியிலே இஃது மற்றோர்படியாகுமெனக் கூறினர்.

கல்லூரி அதிபர்சுவாமியவர்கள் அங்கு கல்லூரிப் பழையமாணவர்களும், ஊர்ப்பிரமுகர்களும, ஏனையோருமாகச் சமூகமளித்திருந்தாருக்கெல்லாம் நன்றித்துதி கூறியபோது பேசியது வருமாறு: எனது மாணவர்களுக்கு அதிகஞ்சிறந்ததையே நான் கொடுக்கவேண்டுமென்பது எனக்குள்ள பேராவலாகும். ஏனெனில், அவர்கள் அதிகஞ்சிறந்தவர்களாயிருந்து, அதிகஞ்சிறந்ததற்கே பாத்திரமானவர்கள் என்பதை நான் கண்டறிந்திருக்கிறேன். அதற்கோர்சான்றாக, இந்தக்கட்டடத்துக்கான அஸ்திவாரங்களை முற்றாக மாணவர்களே வெட்டியிருக்கிறார்கள்.

### நகரசங்க கூட்டம்

1951-ம் ஆண்டுக்குப் புதியமேயரையும், உதவிமேயரையும் தெரிவுசெய்வதற்காக யாழ்ப்பாண நகரசங்க அங்கத்தவர்களின் கூட்டம் ஒன்று யாழ்ப்பாண நகரமண்டபத்துச் சங்கசபா மண்டபத்தில் இம்மாசம் 10-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடந்தேறுமெனச் சங்ககம்மிஷனர் அறிவிக்கின்றார்.

கியத்தை அடைந்துகொள்வதற்கு ஆயத்தமும், அச்சாரமுமாகச் சகல மனிதருக்கும் உமது வரப்பிரசாதத்தைப் பொழிந்தருளும். ஆமென்.

## ஸ்ரீ இம்மனுவேல் திருச்செல்வம் அவர்களின் தேகவியோகம்

நம்பட்டணத்திலே நான்காம் குறுக்குத்தெருவிலுள்ள "எலிசபேத் ஹவுஸ்" எனும் கிருகத்தில் வசித்திருந்தவரும், பிரபல வர்த்தகரும், பலராலும் நன்கறியப்பெற்ற கத்தோலிக்க பிரமுகருமான ஸ்ரீ இம்மனுவேல் திருச்செல்வம் அவர்கள் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் காலஞ்சென்றாரெனும் துயரசெய்தி அறிந்து பெரிதும் மனவருத்தமுற்றோம். இவரின் பிரேதசேமம் இன்று பிற்பகல் 5 மணிக்கு ஆசனக்கோவிலின் சேமக்காலையில் நடந்தேறும்.

R. I. P.

## மரணசங்கதி

பாஷையூர்ப்பதிவாசரும், பரம்பரை ஆயுர்வேதவைத்தியருமான திரு. இறப்பியேல் சின்னப்புஅவர்கள் சிலதினங்களாக நோய்வாய்ப்பட்டிருந்து, டக்றர்சாக்கோஆதியாம் சிறந்தடக்றர்மாரால் சிகிட்சைசெய்யப்பெற்றுங் குணமுறாது அந்தியதேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுச் சென்றசனிக்கிழமை காலஞ்செல்லலாயினர். மரிக்கும்போது இவருக்குவயது 70. தாழையடிக் கத்தோலிக்கபாடசாலை ஆசிரியர்களில் ஒருவரான திரு. எஸ். மோசேஸ்அவர்கள் இவரின் ஏக புதல்வர். செம்பியன்பற்றுக் கத்தோலிக்கபாடசாலை ஆசிரியர் திரு. ரி. எம். அம்புறோஸ்அவர்கள் இவரின்மருகர். இவரின்மரணத்தைப்பற்றி அறியவந்ததும், பலவிடங்களிலிருந்து அனுதாப செய்திகள் அனுப்பப்படலாயின. மறுநாட்சாயந்தரம் பெருந்திரளான இனசனர், ஆசிரியர், ஊரவர்முதலானோர் கூடியிருந்த சமூகத்திலே பாண்டுவாத்தியம் துக்ககானம்இசைக்க, வண. ஜே. நீக்கலஸ்சுவாமியவர்கள் துக்ககீதம்பாடி ஆசீர்வாதம்கூறிநிற்க, இவரின்பிரேதசேமம் சிறப்பாக நடந்தேறியது. இவரையிழந்து துன்புறும் புத்திரர், மருகர், புத்திரிகள் ஆதியோருடன் நானும் அனுதாபப்படுகின்றேன். R. I. P.

## புதியஸ்பீக்கருக்கு வரவேற்பு

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையின் புதியஸ்பீக்கராகத் தெரியப்பெற்றபின் திரு. அல்பேட் பீரிஸ் அவர்கள் தாம் பிரதிநிதித்துவம் வகித்திருக்கும் நாத்தாண்டியாத் தொகுதிக்கு விஜயஞ்செய்தபோது, அத்தொகுதியைச் சேர்ந்த நாத்தாண்டியா, வெண்ணப்புவா, லுனுவிலா, மாறவிலா, மகாவீவா எனும் கிராமங்களைச்சேர்ந்த மக்கள் ஒன்றுசேர்ந்து அவருக்கு ஓர் ஆடம்பரமான வரவேற்பு அளித்தார்கள். அவ்வேளை அவர் பேசுகையில்: இப்போது பாரமானஉத்தரவாதங்கள் என்மீது சுமத்தப்பட்டபோதிலும் எனதுதொகுதியை நான் அலட்சியஞ்செய்யமாட்டேன்; ஆனால், முன்னிலும் அதிகம்நன்றாக அதற்குச் சேவைசெய்வேன்; அவசியகருமங்கள் என்னைத் தடைசெய்யுமிடத்தல்லாது மற்றப்படி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நாத்தாண்டியாவில் நான் இருப்பேன்; ஆதலால் எனது வாசஸ்தலத்தில்வந்து என்னை வழமைபோலச் சந்தித்துப்போகும்படியாக வேண்டுகிறேன்; கொழும்பிலே எனது உத்தியோகபதவிக்குரிய "மம்ராஸ் மகால்" எனும்மனையும் என்னைக் காணவருவார் எவருக்கும் எப்போதும் திறந்தபடியிருக்கும்; அங்கு எனது நண்பர்களையும், என்னோடுபரிசயமுள்ளவர்களையும் காண்பது எனக்குச் சந்தோஷமாயிருக்குமெனக் கூறலாயினர்.

## வாங்கிப் படியுங்கள்.


**பத்திப்பரவசமூட்டும் பரோபகாரியின் சரிதை**

பரிசுத்தம் பரிமளிக்க வாழ்ந்த பெரியார்

தருமசீலர் — தவத்தின்மேதை

**வண. விறதர் இயூஜின் குருசே O. M. I.**

— அவர்களின் சீவியவரலாறு —

ஆக்கியோன் வண. சுவாமி S. G. இல்லறி, O. M, I.

தமிழில் இசைத்தெழுதியவர் பரிமேலர் S. அருளானந்தம் K. S. G.

தெள்ளிய தமிழாக்கம் — கண்கவர் அழகிய தோற்றம்

தியாக விறதர் திருத்தொண்டை விளக்கும்

பிரதிமைப்படங்களைக் கொண்டது.

யாவரும் பொன்னேபோற் போற்றிப் படிக்கவேண்டிய

—— புனிதபுத்தகம் ——

விலை சதம் 50 :: தபாற்செலவு வேறு

கிடைக்குமிடம் :-

காரியதரிசி

அர்ச். சூசையப்பர் கூட்டம்

மேற்றிராசன மாளிகை'

யாழ்ப்பாணம்.


## வேதப் பிரசுர பரப்புதல் ஞாயிறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க்க ஒஞ்சிக்கின்றார்கள். நான் கிறீஸ்துவன்! நான்கத்தோலிக்கன்!" எத்தகைய பெருமை இது? சகோதரனே! நீயும் அப்படியாயின் உனதுவேதஅபிமானம், வேதவைராக்கியம் எங்கே? ஊன்றிநினை. பாதுகாவலனை அனுப்பும்படி பணம் இன்றைக்கே அனுப்பிவிடு.

"தேவபிரசன்னத்தில் அதிகமாகஇருக்க விரும்புகின்றாயா? அடிக்கடிசெபம்பண்ணு. அடிக்கடி ஞானவாசினைவாசி" என்று அர்ச். அகுஸ்தீனார் எழுதியிருக்கிறார். கத்தோலிக்கபத்திரிகைகளோ ஐந்தாம்சுவிசேஷம். அதன் ஆசிரியர்களோ தற்காலத்துச் சுவிசேஷகர்களேயாம். சம்மனசுக்களைத் தேவதூதர்கள்என்று சொல்லுகிறோம். எங்கள்பத்திரிகைகளும் தேவதூதர்களேயாம். ஏனெனில், தேவவரப்பிரசாதத்துக்கும், தேவதிரவியஅனுமானங்களுக்கும் அடுத்தபடியாய் எம்மை மேன்மையான, உண்மையான, உன்னதமான, வீரமுள்ள, துய்ய, நிறைந்தபரிசுத்த கத்தோலிக்கசீவியத்திலே வழிநடத்துவது ஞானவாசினை, கத்தோலிக்கபிரசுரங்கள்.

மறுபடியும் சுவிசேஷத்தைப் போதிக்கும்படி பரமன் சம்பாவிலுஅப்போஸ்தலரை இன்னொருமுறை இவ்வுலகுக்குஅனுப்பச் சித்தங்கொள்ளுவாராயின், அவர்முதன்முதல் தற்கால முறைக்குஇயையக் கத்தோலிக்க பத்திரிகைகள் பலவற்றிற்குப் பத்திராசிரியராகியே தமதுஅப்போஸ்தலதொண்டைத் தொடக்குவாரென அமெரிக்கமேற்றிராணியார்ஒருவர் எழுதுகின்றார். அழுக்கும், துன்மார்க்கமும், அவிசுவாசமும், குடிவெறியும், குரோதமும், நிர்ச்சுரவாதமும் தேங்கியிருக்கும்இக்காலத்திலே, அவைகளைஎதிர்த்து, நரகசாத்தானின் அந்தத்தீச்சுவாலைகளை அவிக்கக்கூடியன கத்தோலிக்க பிரசுரங்களேயாம். ஆகவே, கற்றவனாய்இருந்தால், எழுதஅறிந்தவனாய் இருந்தால், "கெதியாகஉட்காரு. எழுது. உடனே எழுது." உன்னால் அதுஇயலாது போனால் கத்தோலிக்கபிரசுரங்களைத் தவறாமல்ஆதரி.

மகாமேன்மைதங்கிய கொழும்புஅதிமேற்றிராணியாண்டவர் எழுதுவது:— கத்தோலிக்கமக்களே! நீங்கள் கத்தோலிக்கபுத்தகங்களையும், கத்தோலிக்கபத்திரிகைகளையும், மற்றும்கத்தோலிக்கபிரசுரங்களையும் அதிகமதிகமாகப்பரப்பப் பிரயாசையெடுங்கள். கத்தோலிக்கபத்திரிகைகளுக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுங்கள். அவைகளைநீங்கள் ஆசையுடன்படிக்க நன்றாகப் பழகிக்கொள்ளுங்கள். மிகமுக்கியமானகாரியம் இதுவே. இந்தஉண்மையை யாவருடையவும்மனதிலே ஆழமாகப்பதித்துவிடுங்கள். அவைகளை வாசிப்பது எட்டிலேதப்பிலே அல்ல. உங்கள்சரீரசீவியத்துக்கு உயிர்தருகின்ற சுவாசம்போல, உதிரம்போல, நல்வாசினையும் உங்கள்ஆன்மசீவியத்தின் உயிர்நாடியென்பதை நன்றாய்உணருங்கள். அப்பேர்ப்பட்டவாசினை பொழுபோக்குவதற் கல்ல, உங்கள்பெருவாழ்வுக்கு ஒருஉபகரணமாக மாத்திரமல்ல, ஆனால், அதுஉங்கள் கிறீஸ்துவசீவியத்துக்கு இன்றியமையாததாய் இருப்பதாலேயேஎன்பதை அறிவீர்களாக. வைத்தியன் வைத்தியநூல்களைக் கற்கிறான். விஞ்ஞானசாஸ்திரி சாஸ்திரநூல்களைப் படிக்கிறான். நியாயதுரந்தரன் நியாயசட்டங்களைக் கற்கிறான். அரசியல்வாதி அரசாங்கமுறைச்சட்டங்களை ஆராய்கிறான். ஆகவே, உங்கள்ஆத்துமத்துக்கு, நித்தியத்துக்கு இன்றியமையாதவைகளைப்பற்றி விரிவாகஅறிந்துகொள்ள நீங்கள்அசட்டைபண்ணுவது எவ்வளவு மதியீனம்?

"எடுத்துவாசி".

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனக்குச் சடுதியாய்ஏற்பட்டபல்வலியினால் மிகவும் வேதனைப்பட்டு, யேசுவின் திருஇருதயத்தினிடமும் அப்பிலோனியம்மாளிடமும் மன்றாடிச்சுகம்பெற்றேன். இதை நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

E. C.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## இரும்புத்திரை நாடுகளிலே குழப்பமும் கலக்கமும்

நியூயோக்— மாசி 27

கோறியா எங்கோ வெகுதொலையில் இருந்தாலும் அங்கு மஸ்கோ முடுக்கிவிட்ட வலுத்தாக்குதலின் தோல்வியானது, இரும்புத்திரைநாடுகளிலே பாதகமான எதிரொலிகளைப் பெருக்கியுள்ளது. கம்யூனிஸ்தமண்டலத்திலே குழப்பமும், கலக்கமும்வளர்ந்துள்ளன. இந்நிலைமையை "நியூயோக் ஹறல்ட் ரிறிபியூன்" பத்திரிகை தனது தலையங்கத்திலே ஆராய்ந்திருக்கிறது. அது மேலும் எழுதுவதாவது: "செக்கோசிலவெக்கிய கம்யூனிஸ்த அரசாங்கம் கடைசியாக, தனது மாஜிவெளிநாட்டு மந்திரியான விளாடிமிர் கிளமென்டிஸ் என்பவர் அரசாங்கத்தைக் கவிழ்த்துப் பழைய முதலாளித்துவபாதையிலே இறங்கக் கட்சிக்குள்ளேயே மாபெரும் சதித்திட்டம் போட்டாரென்றெல்லாம் சொல்லிக் கம்யூனிஸ்தகட்சியில் கண்டுள்ளபிளவையும், குழப்பத்தையும் ஒப்புக்கொண்டிருக்கிறது.

"இத்தாலிய கம்யூனிஸ்தகட்சியிலேயும் பிளவுதோன்றியிருக்கிறது. இந்த நிகழ்ச்சிகள் கோறியாவுடன் தூரத்துச்சம்பந்தம் உள்ளனவாகத் தோன்றலாம். ஆனல், 'இராசாங்க துரோக' குற்றத்திற்கு மரணதண்டனையைத் திடீரெனச் செஞ்சீன அறிவித்திருப்பதும், பகிரங்கஎதிர்ப்புப் பரவிவருவதாக அது ஒப்புக்கொண்டிருப்பதும், 'ஆயிரக்கணக்கான' செஞ்சீனப் போர்வீரர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்று அது ஒப்புக்கொண்டிருப்பதும், கோறியாப்போரின் பாதகவிளைவுகள் வேலைசெய்யத்தொடங்கியிருப்பதற்கு நேரடியான ருசுக்களாகும். இதற்கிடையே சீனக்கம்யூனிஸ்ததலைவரான மாசேதுங் மாயமாய் எங்கோ போயிருப்பதாகத்தெரிகிறது. இன்னொருதடவை அவர் மஸ்கோவுக்குத் தூதுபோயிருக்கலாம். பிரதான ருஷிய அனுதாபியான சீனத்தளபதி லின்போஎன்பவரைக் கோறிய படைத்தலைமையிலிருந்து விலக்கித் தென்சீனவுக்கு அனுப்பியிருப்பதாக வதந்திகள்உலாவுகின்றன. இவையெல்லாம் சோவியற் ஏகாதிபத்திய மண்டலத்திலே கண்டுள்ள ஆட்டத்தையே குறிக்கிறது."

## அமெரிக்க ஜனதிபதி பதவி

வாஷிங்ரன் — மாசி 27

அமெரிக்கஅரசியல்சட்டம் 22-வது தடவை திருத்தப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் ஜனதிபதிபதவிக்கு ஒருவர் இருதவணைகளுக்குமேல் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது. ஒருவர் கூடியபட்சம் 10 வருஷகாலம் ஜனதிபதிபதவி வகிக்கலாம். ஒருதவணைக் காலம் 4 வருஷம். இருதவணைகளுக்கு எட்டு வருஷம். முந்தியஜனதிபதி எதிர்பாராதவிதமாக இறந்துவிடுவாரானல் அவர் பாக்கியாகவிட்டகாலத்திலிருந்து 2 வருஷம். ஆகமொத்தம் 10 வருஷம். மூன்றாவதுமுறையாக யாரும் ஜனதிபதிதேர்தலில் போட்டியிட முடியாது. ஆனல், தற்போதைய ஜனதிபதி ட்றூமன் அவர்கள்விஷயத்தில் ஒரு விதிவிலக்கு செய்யபபட்டுள்ளது. அடுத்ததேர்தலில் அதாவது 1952-ம் ஆண்டில் அவர்விரும்பினல் போட்டியிடலாம். 1945-ம் ஆண்டு காலஞ்சென்ற ஜனதிபதி றூஸ்வெல்ற்அவர்கள் பாக்கியாகவிட்டுப்போன 3 வருஷமும், பிறகு 1948-ம் ஆண்டின் தேர்தலில் ஜெயித்தும் திரு. ட்றூமன் அவர்கள் பதவிவகிக்கிறார்.

## கண்ணியமான சமாதானம்

சிக்காக்கோ — மாசி 26

"எந்தஒருநாட்டுடனும் கண்ணியமான சமாதானத்திற்குகந்த சாத்தியமானவழிகள் யாவற்றையும் ஆராய அமெரிக்கவரசு எப்போதும் போல இப்போதும் தயாராயிருக்கிறது" என்று நேற்றையதினம் ஆரம்பமான ஐ. நா. அமெரிக்கசங்கத்தின் 3-ம்நாள் மகாநாட்டிற்கு அனுப்பியுள்ளகடிதத்தில் ஜனதிபதி ட்றூமன் குறிப்பிட்டிருக்கிறார். "உலகமக்கள் ஆர்வத்துடன்விரும்புவது சமாதானமே. அதற்குஅவர்கள் ஐ. நா. ஸ்தாபனத்தை நம்பியிருக்கின்றனர். ஐ. நா. ஸ்தாபனம் தனதுஆக்கிரமிப்பு எதிர்ப்பு உறுதியைக் கோறியாவில் திருஷ்டாந்தமாகக் காட்டியுள்ளது" என அவர் சுட்டிக்காட்டுகிறார்.

## ஆசிய குடிகளின் நிலைமை

வாஷிங்ரன்— மாசி 25

ஆசியாவில் நிலச்சீர்திருத்தத்தை— அதாவது உழுது பயிர்செய்கிறவர்களுக்கு நிலம்சொந்தமாக உண்மையில் ஒருசந்தர்ப்பம்அளிப்பதை வற்புறுத்தி, அமெரிக்க பத்திரிகைகள் அடிக்கடி தலையங்கம் எழுதுகின்றன. உதாரணமாக (ஆக்ளண்ட் கலிபோணியா ரிறிபியூன்) பின்வருமாறு குறிப்பிடுகிறது. "குடிவார (நிலக்குத்தகை) முறைகாரணமாகக் குடியானவர்கள் வறுமையிலும், தாழ்ந்த வாழ்க்கைத் தரத்திலும் உழல்கின்றனர். இது கம்யூனிஸ்த சூறையாடலுக்கும் பெரிதும் அனுகூலமாக அமைகிறது. இந்த நிலைமையே ஆசியாவில் நிலச்சீர்திருத்தத்தைத் தீவிரமாக மேற்கொள்ளும்படி வற்புறுத்தவேண்டியதில் அமெரிக்க அரசாங்கத்தாரின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஆசியாவில் கம்யூனிஸம்பரவுவதை வெற்றிகரமாகத்தடுக்க நிலச்சீர்திருத்தம் மிகமிக அவசியம்.

## உண்மையை இருட்டிக்கும் முயற்சி

சான்பிரான்சிஸ்கோ—மாசி 25

அமெரிக்காவுக்கும், மற்றுமுள்ள சுதந்திரநாடுகளுக்குமிடையே சுயேச்சையாகச் சனங்கள்போய்வருவது, சுதந்திரஉலகிற்கும் அடிமை உலகிற்குமுள்ள மாபெரும்மாறுபட்டை எடுத்துக்காட்டுகிறது. மேற்கண்டவாறு இங்கு வடகலிபோணிய உலகவர்த்தமானகவுன்சில்கூட்டத்திலே பேசுங்கால், அமெரிக்க கல்விக்காரியாலய பிரதானி டக்ரர்வில்லியம் ஜோன்ஸ்ரன் குறிப்பிட்டார். மேலும்அவர் கூறியதாவது: "அமெரிக்கர்களாகிய நாம் எதையும் மறைக்கவில்லை. மறைப்பதற்கு நம்மிடம்எதுவும்இல்லை. படுதாபுக்குப்பின்னல் நாடகம்போடுவது நம்தொழில்அல்ல. ஜேர்மானியரோ, இத்தாலியரோ, ஈரானியரோ, இந்தியரோ யார்வேண்டுமானலும் தாராளமாக முன்வரிசையில்அமர்ந்து நமது 'நாடகத்தை' நன்ருகப் பார்க்கலாம். உண்மைநடப்பை ஒருவர்கண்கொண்டு பார்க்க அமெரிக்காவில் வழியிருக்கிறது. இந்நாட்டில் மூடுமந்திரம் எதுவுமில்லை.

## ஹிற்லரைத் தோற்கடிக்க அளித்த உதவி

ஹிற்லரைத் தோற்கடிப்பதற்காகச் சோவியற்ருஷியாவுக்கு அமெரிக்கவரசுஅளித்த சாதனஉதவி விபரம் வருமாறு: 14,700 விமானங்கள், 7,000 தாங்கிகள், 52,000 ஜீப் வாகனங்கள், 3,75,000 டிறக்குகள், 186 போர்க்கலங்கள். மற்றும் எண்ணிலடங்கா யுத்ததளவாடங்கள், மருந்துச்சாமான்கள்.

---

## நேர்த்தியின் பூர்த்தி

சங். சிஸ்றர் அல்போன்சாவிடத்திலும், அர்ச். தெரேசம்மாளிடத்திலும் கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பட்டது.

தாளையடி ஓ. ஆ.

---

தமிழுலகம் வியந்துரைக்கும்

# வீரமாமுனிவர் யாத்த தேம்பாவணி

தேம்பாத, வாடாத, கூம்பாத, மலர்மாலையென்னும் பொருள்பயக்கும் சொற்றொடர்ப்பெயரைநாட்டி, அவதரித்த நாதனைக் கைத்தாதையாய் வளர்த்த சூசையென்னும் வளனைத் தன்னேரிலாத் தலைவனகக்கொண்ட தேம்பாவணி என்னும் தொடர்நிலைச் செய்யுட்காவியம் தமிழ்நாட்டில் வீரமாமுனிவர்என்று பாராட்டப்பெறும் கொன்ஸ்ரன்ரைன் யோசேப்பு பெஸ்கி என்பவரால் சிந்தாமணி, சிலப்பதிகாரம், இராமாயணம், திருக்குறள் முதலிய நூன்முறைகளைத்தழுவித் தொல்லாசிரியர் முறைமையிற் தவருது 1726-இல் யாக்கப்பெற்றது.

இக்காப்பியம் பெருங்காப்பியஇலக்கணம் ஒருங்கமையப்பெற்றது. அருகிய இலக்கணமுறைகள் அமைந்தது. பெருகியகற்பனை பொருந்தியது. சொல்நயம், பொருள்நயம் செறிந்தது. இமிழ்கடல்சூழ் தமிழ்நாடுமெச்சும் திருத்தக்கதேவர், கம்பர், சேக்கிழார் போன்ற நல்லிசைப் புலவர்களின் அரும்பெருங்கருத்துக்களெனும் திருமணிகள்பொதியப்பெற்ற கருவூலமாகத்திகழ்வது. சத்தியவேதத்தின் உத்தமசரித்திரங்களும், சன்மார்க்க சீலங்களும், நியாயப்பிரமாணங்களும் விளங்க மூன்றுகாண்டம் முப்பத்தாறு படலங்களாக வகுக்கப்பெற்று மூவாயிரத்து அறுநூற்றுப்பதினைந்து செய்யுட்களைக்கொண்டது. பாரகாவியஞ்செய்த கல்வியிற்பெரியோன் கம்பன் தனது 12,000 செய்யுட்களில் 87 சந்தபேதங்களை வைத்துப்பாடினர். வீரமாமுனிவரோ 90 சந்தபேதங்களை அமைத்துக் காவியம்இயற்றியுள்ளார். மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றப்பெற்றகாலத்தில் அவைக்கண்இருந்த அருந்தமிழ்வாணர் இதன் சொற்பொருள்நயத்தைப் பெரிதும்பாராட்டினா. பாராட்டினதுமன்றி வீரமாமுனிவரெனப் பட்டமும்வழங்கினர்.

தமிழ்ஆர்வம்படைத்த யாவரும் இதனைப்படித் தின்பற்றிருக்கின்றனர். தமிழ்வரலாறெழுதிய பூரணலிங்கம் பிள்ளை என்பார், "சீவகசிந்தா மணிக்கு இணையானதோர் காவியம்இது" என்று எழுதியுள்ளார். தமிழ்இலக்கியங்களிலே தலைசிறந்தகாவியங்களில் நான்கினைத்தேர்ந்தால் தேம்பாவணியும் அவற்றுள்ஒன்ருகும்" என்கிறார் பிஷப் கால்டுவெல்.

"நான் தேம்பாவணியைப் பாடஞ்சொல்லுதலும், கிறீஸ்தவர்முதலிய பிறமதமாணுக்கர்கள் என்பாற்பாடங்கேட்டலும் கூடாதசெயல்களென்று சிலர் சொல்லிவருவதாகத் தெரிகின்றது. தமிழ்நூல் யாதாயிருப்பினும் அதிலுள்ள சொற்பொருள்நயங்களை உணர்தல் பிழையாகாதே. கிறீஸ்தவமதத்தைப் பிரசாரஞ்செய்ய வேண்டுமென்பது என்கருத்தன்று. தமிழ்நூல் என்னும்முறையில் யாதும்விலக்கப்படுவது அன்று," என்று அவர் தம்கருத்தைப் புலப்படுத்தினர். "குறைகூறியவர்கள் இவர்களுடைய உண்மைக்கருத்தை அறிந்துஅடங்கிவிட்டனர்" என்று மகாமகோபாத்தியாய டக்றர் உ. வே. சாமிநாதையர்இயற்றிய ஸ்ரீமீனட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் முதற்பாகம் 149-ம் பக்கத்தில் எழுதியுள்ளார். பிள்ளையவர்களிடம் கலைபயின்ற சவராயலுநாயகர்;

> விளங்குறுவெண் புகழ்வனைந்த
> மீனட்சி சுந்தரப்போர்க்
> களங்கமில்தே சிகனென்பாற்
> கருணைநனி புரிந்ததனற்
> றுளங்குறுதேம் பாவணிக்குச்
> சொலத்துணிந்தே னுரைவிரித்து
> வளங்கெழுமவ் வருளிலையேல்
> வருத்தலரி தரிதரிதே

என்று தங்குருமூர்த்தியைப் போற்று என்று உலகம்போற்றும் உத்தம துறவி, தமிழணங்குசெய்த தவப்பயன் பேற்ருல் அவள்உதரத்துற்றுப்பிறந்து தமிழ்ப்பணியே தமதுதிருப்பணியாகக் கொண்டு நாடோறும் நூல்பலஎழுதித் தமிழ்மக்கள் உய்ந்துபோமாறு நீதிவழுவா நெறிமுறையினைச் செய்தொழுகும் சுத்தானந்த பாரதியார்அவர்கள் தேம்பாவணியின் கூம்பாதமணத்தை மோந்துஅநுபவித்த காரணம்பற்றியன்ருே,

> வீரமா முனிவர் தைரிய நாதர்
> விரிதமிழ்க் கலைமணங் கமழும்
> ஆரமா முனிவர் அகத்தியர் போலே
> அருளினர் அரியநன் னூல்கள்
> சாரமாந் தேம்பா வணியினைத்
> தொடினுந்
> தமிழ்மணங்கமழுமென் கரமே
> ஈரமாநெஞ்சில் இடம்பெற நட்டால்
> இன்பமாய் மலருமென் வாழ்வே

என்றுகூறித் தேம்பாவணியின்பெருமையைத் தமிழ்உலகத்திற் கறிவிக்கின்றார்.

**************************

**வித்துவான்**

**எவ். எக்ஸ். ஸி. நடராசா**

**************************

கம்பராமாயணத்தைத் துருவித் துருவி ஆராய்ந்து அதன் கவிநயத்தை இரசித்து அநுபவித்துவரும் சென்னைபட்டணம் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் சேதுப்பிள்ளையவர்கள் வீரமாமுனிவர்அவர்கள் சரித்திரத்தையும், நூல்களையும்எழுதிப் பதிப்பித்ததுமல்லாமல் அந்நூல்களின்நயங்களையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

"சிறந்தகாவியமாகத் தெவிட்டாத மதுரமாய்த் தெளிந்தகருத்தாய்ச்செப்பரும்பொருளாய்ச் சகலஅலங்காரத்தோடு வீரமாமுனிவர் தேம்பாவணியைப்பாடினர்" என்கிறார் சேதுப்பிள்ளையவர்கள். தேம்பாவணியின்பொருள் செவ்வனம் விளங்குதற்பொருட்டு வீரமாமுனிவரே அதற்குப்பதவுரையும், பொழிப்புரையும் செய்துள்ளார். இறையன்பு, இயற்கைஎழில், ஈடும்எடுப்புமில்லா உயரியகுறிக்கோள், சொற்சுவை, இன்னேசை, பொருளாழம் இவையெல்லாம் ஒருங்குதிரண்டு இக்காப்பியத்தில் விளங்கக்காரணமென்ன? முன்னெருகாலத்தில் புலவர்ஒருவர் கம்பரைநோக்கி, அன்னவர்இராமாயணம் அவ்வளவாகஇரசிக்கக் காரணமென்னவெனக் கேட்டபோது, கம்பர்மறுமொழியாக, "ஒவ்வொன்றிலும் ஓரொரு அகப்பை அள்ளிக்கொண்டேன்; அதுவேகாரணம்" என்ருராம். கம்பராமாயணம் இவ்வளவாக இரசித்தும் தெவிட்டாமலிருக்கின்றதே என்று வீரமாமுனிவரைக் கேட்டபோது, அவர் கம்பரின்இரசத்தில் ஓர்அகப்பையைத் தான் எடுத்துவிட்டதாகக் கூறினராம். கம்பரின் காவியஅமைப்பைப் பின்பற்றிச் சிந்தாமணி, சிலப்பதிகாரம், திருக்குறள், பெரியபுராணம் என்னும் தமிழ்நூல்களின்சுவை ஒருசிறிதும் குறையாவாகையிற் தங்காப்பியத்தைச் செய்துமுடித்தமையே அதற்குப் பெருமையைஅளிக்கின்றது. (வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரிகோணமலை மேற்றிராணியாண்டவரின்

# தபசுகால ஆயர் நிருபம்

(முன்தொடர்ச்சி)

திருச்சபையானது விசுவாசிகளிடம் தங்கள்பிரயோசனத்திலும், வருமானத்திலும் பத்திலொருபங்கைக் கேட்டபோது, புதிதாய் ஒன்றையும் கேட்கவில்லை. ஏலவே பழையஏற்பாட்டில் ஆபிரகாம் பிரதான ஆசாரியருக்கு முதற்பலன் கொடுத்ததாகவும், 'யாக்கோப்பு அதைக்கொடுக்கும்படி பிரசித்தமாய் நேர்ந்ததாகவும் (ஆதி. xiv, xxviii) வாசிக்கின்றோம். முதற்பலன் கொடுத்தல் தெரிந்துகொள்ளப்பட்ட சனங்களாகிய யூதருக்கு மோசேசினிடம் சருவேசுரன்கொடுத்தகட்டளையில் அடங்கிஇருந்தது. (யாத்தி. xxii. லேவி vii. எண் xviii.)

இன்றைக்கும் உலகத்தின் அநேக மேற்றிராசனங்களில் விசுவாசிகள் கோவிலுக்குத் தங்கள் சம்பாதிப்பில் பத்திலொன்றும், அடிக்கடி அதற்கு மேலதிகமாகவும் கொடுக்கின்றனர். இதற்காக நாம் சருவேசுரனுக்கு நன்றி செலுத்துகின்றோம். ஏனெனில், மற்றப்படி உங்களுக்கு அநேககோவில்கள் இப்போது இருக்கமாட்டா. எமது குருமாருக்கும், அநேக காரியங்கள் வேண்டியதாய் இருக்கும். ஆனால், நமது மேற்றிராசனத்தின் பாடென்ன?

இம்மேற்றிராசனத்தில் திருச்சபைக்குரிய உங்கள் கடமைகளை நிறைவேற்றவும், உங்கள் ஞானமேய்ப்பரின் பத்தியான ஊழியத்திற்கு ஓர் விதத்தில் பதில் நன்றிசெலுத்தவும் உங்களுக்குப் பிரதான வழியாய்இருப்பது குருதாபரிப்புப்பணமே. குருதாபரிப்புப் பணமானது விசாரணைப்பகுதியின் மாதாந்த பணத்தெண்டல் என்று உங்களுக்குத் தெரியும். இந்தத்தெண்டலுக்கு விசாரணைப்பகுதியில் ஒவ்வொரு குடும்பமும் கட்டளைக்குருவின் தாபரிப்புக்காக உதவும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது. முப்பத்தைந்து வருடங்களுக்குமுன் இது ஏற்படுத்தப்பட்டபொழுது, விசுவாசிகள் தங்கள் வருமானத்தில் பத்திலொருபங்கையல்ல, முப்பதிலொருபங்கைக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். அதாவது அவர்கள் மாதத்தில் ஒருநாட் சம்பளத்தை அல்லது வருமானத்தை ஆண்டவருக்கு அளிக்கும்படி தூண்டப்பட்டனர். இது பெருந்தொகைப் பணமா? அநேகர் ஆத்தும சரீரத்துக்குத் தீங்கானதும், பிரயோசனமற்றதுமான காரியங்களில் செலவிடும் அல்லது பாழாக்கும் பணத்தைப்பார்க்கிலும் இது பெருந்தொகையா? உண்மையில் ஒரு மாதத்தில் ஒரு நாளின் வருமானத்தை உங்கள் நித்தியஇரட்சணியத்துக்காக எவ்விதபிரயாசத்தையும், தொல்லையையும், பரித்தியாகத்தையும் கவனியாது உழைக்கும் எங்கள் பரிசுத்தமாதாவாகிய திருச்சபைக்குக் கொடுக்கும்படி கேட்டல் அதிகமல்ல.

சுகிர்தஞாபகத்துக்குரியவராய் எமக்கு முன்னிருந்த மேற்றிராணியாண்டவரைப்போல நாமும் வருமானத்தில் முப்பதிலொருபங்கைத் திருச்சபைக்குக் கொடுக்கும்படி ஒவ்வொரு குடும்பத்தையும் தூண்டினோம். எல்லோரும் அன்பின் நிமித்தமும், நீதியின் நிமித்தமும் உதவி செய்ய வேண்டும். எல்லோரும் நாம் கொடுத்த விசேஷ புத்திமதியைப் பின்பற்றினால் நமது மேற்றிராசனம் சொந்தஆதரவு உடையதாகும். அப்போதுதான் மற்றவரின் தருமக்கொடையின்றி நீங்களே அதைத்தாபரிப்பீர்கள். அப்போதுதான் இலங்கை உரோமான் கத்தோலிக்கராகிய உங்கள் நிலைமை சுதந்திர இலங்கைவாசிகளாகிய உங்கள் நிலைமையோடு பொருத்தமுள்ளதாய் இருக்கும்.

ஆனால், ஒவ்வொரு விசாரணைப்பங்கிலும் அதிகப்பற்றான குடும்பங்கள் குரு தாபரிப்புப்பணம் கொடுப்பதில்லையென்று துக்கத்தோடு கேள்விப்படுகின்றோம். இது நமக்கோர் பிரதான விஷயம். ஏனெனில், எமது அநேக மக்களின் இந்தக்கவலையீனத்தினாலும், ஊக்கமின்மையாலும், கடமைசெய்யாமையாலும் எமது மேற்றிராசனம் தனக்குரிய காரியங்களைக் காப்பாற்ற முடியாமல் வருந்துவதுமன்றி, முன்னேறிவிருத்தியடையவும் முடியாமல் இருக்கின்றது. இந்தக்கவலையீனம் அறியாமையால் வருகின்றதென்று நம்புவோமாக. ஆண்டவரின் திருச்சபையையும், அவரின் மேய்ப்பர்களையும் நேசியாதவர்கள் அவரின் ஆசீர்வாதங்களை விரும்புவதெப்படி?

சில குடும்பங்களுக்குத் தங்கள் வருமானத்தின் முப்பதிலொருபங்கைக் கொடுத்தல் கூடுமாயினும், அப்படிக் கொடுத்தல் வெகுபொறுப்பாய் இருக்குமென்றதை இலகுவாய் விளங்குகின்றோம். சிலகுடும்பங்களில் மாதச்சம்பளம் அந்தக்குடும்பங்களின் தாபரிப்புக்கே போதாது. இவ்வித நிலைபரத்தில் இருப்பவர்கள் மனச்சாட்சியின்படி இயன்றதைக்கொடுக்கட்டும். அற்பகொடைக்கும் சம்பாவனை உண்டென்று நினைப்பார்களாக. பணமில்லாவிடில் எப்பொருளையும் கொடுத்துக் கடமையை நிறைவேற்றலாம். விளைபொருளில் அற்பபகுதியாயினும் கொடுக்கலாம். பொருளினால் உதவிபுரிய முடியாவிடில் விரும்பியஊழியத்தினால் அப்படிச்செய்யலாம். ஆனால், எல்லோரும் ஆசீர்வாதத்தைப் பெறும்படி எவ்வித பரித்தியாகத்தையாயினும் திருச்சபைக்குச் செய்யவேண்டும். ஏனெனில், எளியவர்களுக்குக் குடிக்கக்கொடுத்த கொஞ்சத்தண்ணீர் பெருஞ்சம்பாவனையைப் பெறுமாயின் கிறீஸ்துநாதரின் ஞானச்சரீரமாகிய திருச்சபை இந்தமேற்றிராசனத்தில் வளர்ந்து செழித்தோங்கும்படி தங்கள் பரித்தியாகங்களால் செய்பவரின் சம்பாவனை எப்படிப்பட்டதாய் இருக்கும்.

கடைசியாய், வண. சுவாமிமார்களே, இந்தக்கட்டாய அலுவலைப்பற்றி உங்கள் விசுவாசிகளுக்குக் கற்பிக்கும் உங்கள்கடமையை உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகின்றோம். உங்களில் ஒருவரும் உங்கள் விசுவாசிகளிடமிருந்து பணஉதவி கேளாதபடியால் தாங்கள் கொடுக்கவில்லையென்று பல முறை நம்மிடம் கூறினர். அவர்கள் இதை அறிந்திருந்தால் கொடுத்திருப்பார்கள். குருதாபரிப்புப்பணங் குறைந்தகாரணம் உங்களின் கலையீனமாகவே இருக்கலாம். ஆதலால் உங்கள் விசுவாசிகளுக்கு ஒரு கடமையைப்பற்றி மாத்திரமல்ல, எல்லாக் கடமைகளைப்பற்றியும் கற்பிக்கவேண்டும் என்பதை மறவாதிருப்போமாக... "சுவிசேஷத்தைப் போதிப்பவர்கள் சுவிசேஷத்தினாலேயே சீவிக்கவேண்டும்"என்று கர்த்தர் விதித்திருக்கின்றனர். இதில் வெட்கத்துக்குநியாயமில்லை. சருவேசுரனின் அன்பின் நிமித்தமும், ஆத்துமங்களின் இரட்சணிய உற்சாகத்தின் நிமித்தமும் செல்வத்தைக் கைவிட்டவர்களாய், மற்றவர்களின் தருமக்கொடையை நம்பிச் சீவிப்பவர்களாய் இருக்கும்பொழுது வெட்கத்துக்கு இடமில்லை. கிறீஸ்துநாதரின் பிரதிநிதிகளாகிய நாம் விசுவாசிகளிடம் சருவேசுரன் அவர்களுக்குக்கொடுத்த பொருளில் ஒரு சிறு பகுதியை நமது மேற்றிராசனத்தில் அவருடைய இராச்சியம் பரவும்படி தந்துஉதவக் கேட்பதில் வெட்கத்துக்கு இடமில்லை. நோக்கங்களில் எல்லாம் பெரியநோக்கமாகிய சருவேசுரனின் இராச்சியம் பரம்புதலுக்காகத் தருமங்கேட்க எப்பொழுதும் ஆயத்தமாய் இருப்போம்......

முடிவுரையாக, யேசுக்கிறீஸ்துநாதரில் அன்பார்ந்த வண. சுவாமிமார்களே, பிள்ளைகளே, இந்த மேற்றிராசனத்திலுள்ள தங்கள் மேய்ப்பர்களையும், தங்கள் கோவில் திருநாட்களையும், எளியவர்களுக்காய்ப்பண்ணிய அநேக விண்ணப்பங்களையும் தாராளமனதோடு கடந்தகாலத்தில் ஆதரித்த சகலருக்கும் இந்தத்தருணத்தில் எமது நன்றியைச் செலுத்துகின்றோம். நீங்கள் கொடுத்தவைகளையெல்லாம் சர்வேசுரனின் ஊழியருக்காகவும், அவரின் திருச்சபைக்காகவும், அவரின் எளியவர்களுக்காகவும் கொடுத்திருக்கிறீர்கள். கொடையிற் சிறந்தவராகிய சருவேசுரன் எவ்விதசம்பாவனை உங்களுக்கு அருளவேண்டுமென்று அறிவார். உங்கள் எல்லோரையும் சருவேசுரன் ஆசீர்வதிப்பாராக. —ஆமென்.

✠ இன்னுசியார் கிளேனி S. J.
திரிகோணமலை மேற்றிராணியார்

---

தபசுகாலத்தின்

## 5-ம் ஞாயிறு

(திருப்பாடுகளின் ஞாயிறு)

### சுவிசேஷ வாசிப்பு

(அரு. 8 : 46—59)

அக்காலத்தில் யேசுநாதர் யூதர்கள்கூட்டத்தை நோக்கித் திருவுளம்பற்றினதாவது: உங்களில்எவன்என்னிடத்தில் பாவமுண்டென்று காட்டக்கூடும்? உங்களுக்குநான் சத்தியத்தைச் சொல்லியிருக்க நீங்கள் ஏன் என்னை விசுவசிக்கிறதில்லை? சர்வேசுரனால் உண்டானவன் சர்வேசுரனுடைய வாக்கியங்களைக் கேட்கிறான், நீங்களோ கேட்கிறதில்லை. ஏனென்றால், சர்வேசுரனால் உண்டாகாதவர்கள் என்றார். ஆதலால் யூதர்கள் மறுமொழியாக: நீ சமாரியன் என்றும், பேய்பிடித்தவனென்றும் நாங்கள்சொல்லுகிறது சரியல்லவோ? என்றார்கள். அதற்கு யேசுநாதர் மறுவுத்தாரமாகத் திருவுளம்பற்றினதாவது: நான் பேய்பிடித்தவனல்லன்; ஆனால் நான் என்பிதாவைச் சங்கிக்கிறேன். நீங்களோ என்னைச் சங்கையீனப்படுத்தினீர்கள். ஆனால், நான் என்மகிமையைத் தேடுகிறதேயில்லை. அதைத் தேடுபவரும் எனக்குநியாயந் தீர்ப்பவருமாகிய ஒருவரிருக்கிறார். யாராயினும்ஒருவன் என் வார்த்தையை அனுசரிப்பானேயாகில் என்றென்றைக்கும் அவன்மரணத்தைப் பாரான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்என்றார். அதைப்பற்றி யூதர் சொன்னதாவது: நீபேய்பிடித்தவனென்று இப்போது அறிந்துகொண்டோம். அபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள். ஆயினும்நீயோ: யாராயினும் என்வார்த்தையை அனுசரிப்பானேயாகில் என்றென்றைக்கும் மரணத்தைச் சுவைபாரான் என்கிறாய். எங்கள் பிதாவாகிய அபிரகாமைவிட நீ அதிகம் பெரியவனோ? அவர் மரித்தாரே; தீர்க்கதரிசிகளும் மரித்தார்களே; உன்னை யார் என்று மதித்துக்கொள்ளுகிறாய்? என்றார்கள். யேசுநாதர்மறுமொழியாகத் திருவுளம்பற்றினதாவது: என்னைநானே மகிமைப்படுத்திக்கொண்டால், என் மகிமை ஒன்றுமில்லை. என்னை மகிமைப்படுத்துகிறவர்என்பிதாவானவர்தான். அவரைத்தான் உங்கள்சர்வேசுரன் என்கிறீர்களே. ஆயினும், நீங்கள்அவரை அறியவில்லை. நானோ அவரைஅறிந்திருக்கிறேன். நான்அவரை அறியேனென்று சொல்லுவேனாகில் உங்களைப் போலநானும் பொய்யனாயிருப்பேன். ஆனால், நான் அவரை அறிந்திருக்கிறதுமன்றி அவருடையவாக்கியத்தையும் அனுசரிக்கிறேன். உங்கள்பிதாவாகிய அபிரகாம் என் நாளைக் காண ஆவலோடுஆசித்தார்; அதைக்கண்டு களிகூர்ந்தார்என்றார். ஆகையால் யூதர்கள்: உனக்குஇன்னும் ஐம்பது வயதில்லையே, அபிரகாமைக் கண்டாயோ? என்றுசொன்னார்கள். யேசுநாதர் அவர்களைநோக்கி: அபிரகாம் உண்டாவதற்குமுன்னமே நான் இருக்கிறேனென்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். இதினிமித்தம் அவர்கள் அவர்பேரில் எறியும்படி கல்லுகளை எடுத்தார்கள். யேசுநாதரோ மறைந்து தேவாலயத்திலிருந்து வெளியேபோனார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

ஆசிரியைகளினதும்
பழைய மாணவிகளினதும்
வருடாந்த

## ஞானவொடுக்கம்

—※—

ஆசிரியைகளினதும், பழைய மாணவிகளினதும் வருடாந்த ஞானவொடுக்கமானது இளவாலைத் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நிகழும் பங்குனிமாசம் (28-3-1951) புதன்கிழமை பி. ப. 4 மணியளவில் ஆரம்பமாகி அடுத்துவரும் சித்திரை மாசம் 1-ந்திகதி காலை திவ்விய பூசையுடன் முடிவாகும்.

ஞானவொடுக்கத்தில் பங்குபற்றவிரும்புவோர் தாபனத் தலைவியவர்கட்கு ஏற்கனவே அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

"அர்ச். மரிய கொறற்றி"என்னும் புதியஅர்ச்சியசிஷ்டவளின் நாடகமானது, திருக்குடும்பக் கன்னியர்மடமண்டபத்தில் சித்திரைமாசம் 1-ந்திகதி பி. ப. 6 மணியளவில் தமிழில் அழகாக நடித்துக்காட்டப்படும். ஞானவொடுக்கத்தில் பங்குபற்றியோர் இதையுங்கண்டு களிகூர்ந்தேகுமாறு அன்புடன் வரவேற்கிறோம்.

MOTHER SUPERIOR
Holy Family Convent
Ilavalai

---

## Ceylon Government Railway

### LEVEL CROSSING REPAIRS

The Level Crossing at 13 miles 35 chains (Railway mileage) between Ganemulla and Gamapha Railway Stations on the Jaela—Kadawatta Road will be closed for vehicular traffic as follows for effecting repairs :-

Totally closed from 12.00 midnight on Saturday 10-3-51 to 3-00 a. m. on Sunday 11-3-51.

Partially closed from 3-00 a. m. to 6-00 a. m. on Sunday 11-3-51.

During the period of partial closure, trffic will be assisted over the level crossing.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mal. No. 475. Eng.

## நியூகினியாவில் குஷ்டரோகம்

அயனுந்ததேசங்களிலே அபாயகரமான அநேகநோய்கள் அடிக்கடி இன்னுமே தலைகாட்டிக்கொண்டிருக்கின்றன. வைத்தியசாஸ்திரம் அத்துணைபெரும் அபிவிருத்தி அடைந்திருக்கும்காலமாகிய இந்த இருபதாம் நூற்றுண்டில்தானும் தொற்றுநோய்கள் இன்னுமே பெருகிக்கொண்டு வரும் அநேகநாடுகள் இருக்கின்றன.

மனிதஉடலைப் பாதிக்கின்ற மிகமோசமான வியாதிகளில் ஒன்று சந்தேகமின்றியே குஷ்டரோகமாகும். மனிதவாழ்க்கையின் ஞாபகத்துக்கெட்டிய காலமுதலே இந்தரோகம்இருந்து வருகிறது. இந்தநோய் அத்துணை கடுமையாகப் பரந்து தொற்றுவதாய் இருப்பதாலே இதுகண்டு வருந்துகிறவர்கள் ஏனைய தங்கள் உடன்மனிதரிலிருந்து வேறுகப்பிரித்து முற்றுமே தனிமையாக விடப்படவேண்டியிருக்கிறுர்கள். இவர்களிலே ஐம்பது பேர்வரையில் நியூகினியாக் கரைக்குச் சமீபமாய் சிறியதீவுஒன்றில் சஞ்சரித்து வருகின்றனர். இந்தத்தீவில் ஆரோக்கியமுள்ளவராய் ஒரேயொருமனிதசிருட்டியே இருந்துவருகிறுர். இளவயசுடைய ஓர்டக்றரானஇவர் தமக்குண்டான சாமர்த்தியத்தைக்கொண்டு தமதுநோயாளருக்குச் சிறந்தவைத்தியசிகிச்சைஅருளப் பிரயாசை எடுத்துவருகின்றுர். மனிதவர்க்கத்தைப் பீடித்துவாட்டுகின்ற மகாப்பயங்கர நோய்களுள்ஒன்றுடன் தன்னந்தனிமையாகவே இவர் போராடி வருகின்றுர்.

ஆயினும், மனிதசமூகத்தின்சேவைக்கென்று தமதுவாழ்க்கையை அர்ப்பணஞ்செய்துள்ளவர் இவர் ஒருவர் மாத்திரமல்ல. அநேகர் இவருக்குமுன்னமே இவ்வாறு அர்ப்பணஞ்செய்திருக்கின்றனர். தொற்றுநோய்களை எதிர்த்துப் போராடுவதிலே எண்ணிறந்த விஞ்ஞானிகள் இன்றுமிகுந்த சிரத்தையுடன் தங்கள்வாழ்க்கையை அர்ப்பணஞ்செய்துவருகிறுர்கள்.

கடந்துபோனவருடங்களிலே அடைந்துகொண்ட மிகச்சிறந்தசித்திகளில்ஒன்று, குயினைன்உபாயத்தைக்கொண்டு மலேரியாவை எதிர்த்துப் போராடுவதில் கையாளப்பட்ட முறையே என்பதில் சந்தேகமில்லை. இந்த முறை மனிதர் சஞ்சரித்துவரும் இப்பூகோளத்தின் சகல அயனுந்தநாடுகளிலும்,உபஅயனுந்தநாடுகளிலும் இன்று பிரயோகிக்கப்படுகிறது.

இதுகாரியமாய், முந்திய சர்வதேச சங்கத்தின் அதிகம்நிபுணத்துவம் வாய்ந்த மலேரியாக்கம்மிஷன் 1933-ம் ஆண்டுவிடுத்த அறிக்கைஒன்றில் வெளியாயிருக்கும் சிபாரிசுகள் மதித்தற்கரிய விசேஷமுடையனவாகும். மலேரியாக்காலமுழுவதிலும, தினமும் 6 கிறேய்ன் குயினைனும், ஓர்கால் மலேரியா பீடிக்குமிடத்து 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைனும் அருந்திவருவது மலேரியாவராமல் பாதுகாப்பதற்கும், அதுவருங்கால் குணமாக்குவதற்கும் சித்திகரமான ஓர்மருந்தாக அமையுமென்று அந்தநிபுணர்கள் தீர்த்திருக்கின்றுர்கள்.


## For Stamp Collectors

New Selections

75 Foreign Stamps

all Different — Re. 1.00

*Apply:*

*Manager,*

**St. Joseph's Catholic Press,**

**Jaffna.**


## கம்யூனிஸ்த அலங்கோலம்

ஸ்பெயினிலே 1937-ம்ஆண்டு ஜருமா அரங்கத்தில் ஸ்பானிய குடியானவர்கள் பராக்கிரமத்துடன் சமராடினுர்கள். அவர்களில் பலர் மோட்டர் வாகனத்தைக் கண்ணுல்பார்த்தது கூடக் கிடையாது. தாங்கிகள்வந்தால் அலறிப்புடைத்துக்கொண்டு ஓடிவிடுவார்கள். அப்போது அவர்களின் கம்யூனிஸ்ததளபதி எல். காம்பசினோ(குடியானவன் எனப்பொருள்) என்பவர் தோன்றி அவர்களின் கிலியைப் போக்கடித்தார். இந்த எல். காம்பசினோ என்பவர் பிற்பாடு பெரியகம்யூனிஸ்த சேனுதிபதிஆகிவிட்டார். இவரதுபடத்தை ரூஷியாவில் நெருப்புப்பெட்டிகளின்மீதுஒட்டிப் பிரமாதமாக விளம்பரம் செய்தார்கள். ஒருகாலத்தில்செம்படைவீரனுக விளங்கிய இந்த எல்.காம்பசினோ (உம்மைப்பெயர்—வலன்ரின் கொன்சாலஸ்) என்பவர் பரீஸ்நகர நீதிஸ்தலத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறுர்:

"சர்வதேச விசாரணைக்கம்மிஷன் ஒன்றுடன்கூட ரூஷியாவுக்குப்போய் அங்கே கைதிகள்முகாம்களில் கம்யூனிஸ்த கொடுமைகளினுல் மடிந்த லட்சக்கணக்கானேரின் சவக்குழிகளை அந்தக்கம்மிஷனுக்குக்காட்ட நான் தயாராயிருக்கிறேன். நான் அடைபட்டிருந்த சிறையையும் காட்டுகிறேன். இன்னுமுள்ள சிறைகளையும் காட்டுவேன். அப்போது, கம்யூனிஸம் என்று சொல்லப்படுவதன் உண்மைநடப்பானது, செங்கொடிகட்டிநடக்கும்பச்சைப்பாசிஸ்தமே என்பதைக் கம்மிஷன் கண்கூடாக அறியமுடியும்."

மீண்டும், கொன்சாலஸின் பூர்வீகத்துக்கு வருவோம். ஸ்பெயினில் ஜெனறல் பிறுங்கோஅவர்கள் வெற்றியடைந்தபிறகு இவர் ரூஷியாவுக்குத் தப்பியோடினுர். அங்கே முதலில் அவர் ஒருசோவியற் இராணுவஜெனறல் ஆக்கப்பட்டார். ஆனுல், உடனே அவரதுதலைக்குக் கல்விழுந்துவிட்டது. கைதியானுர். மஸ்கோச்சந்துஒன்றில் தெருஅமைக்கும் வேலையில் தள்ளப்பட்டார். அதன்பின்னர் ஒவ்வொரு அடிமைத்தொழில் முகாமுக்கும் உதைபந்துபோல உதைத்துத் தள்ளப்பட்டார். பரீஸ்நகர் நியாயஸ்தலத்தில் அவர் சொன்னதாவது: "6,000 ஸ்பானியதோழர்கள் என்னேடு ரூஷியாவுக்கு வந்தார்கள். 1948-ம்ஆண்டிலே நான் ரூஷியாவிலிருந்து தப்பியோடினேன். அப்போது என்தோழர்களில் 1,200 பேர்களே பிழைத்திருக்கக்கண்டேன். மற்றவர்கள் சோவியற்சிறைமுகாம்களில் மக்கிமடிந்துபோயினர்."

கொன்சாலஸுடன் கூட மற்றும் பலரும்ரூஷியர், ஜேர்மனியர், போலிஷ்காரர், பால்திக்நாட்டவரும் பரீஸ்நகர் நியாயஸ்தலத்தில் பிரான்சிய ஆசிரியர் டேவிட் ரூஸேஅவர்கள் பிரான்சிய கம்யூனிஸ்த வாரப்பத்திரிகையான "லேலெற்றர் பிராங்கே"மீது தொடுத்த மானநஷ்டவழக்கு விசாரணையில் வழக்காளி ரூஸேயின் தரப்பில் சாட்சிகளாக ஆஜராயிருந்தனர். ஹிற்லரின் சிறைமுகாமில் அவதிப்பட்ட ஆசிரியர் ரூஸே அவர்கள் (வயது 38) சர்வதேச விசாரணைக்கம்மிஷன் ஒன்று உலகிலுள்ள சிறைமுகாம்களைச் சோதித்துப் பார்க்க வேண்டும்என ஓராண்டுக்கு முன் யோசனை வெளியிட்டிருந்தார். சிலர் குறிப்பிட்ட முகாம்கள் ரூஷியாவில் "திருத்துவதற்காகவே" உள்ளன என்றும், அவர்கூற்றுமுழுப் புளுகு என்றும், கம்யூனிஸ்த வாரப்பத்திரிகை "லேலெற்றர்" தாக்கியது. இதன்மீது, அவர் மானநஷ்டம்கோரி வழக்காடினுர்.

ரூஸே தரப்பில் சாட்சிசொன்ன மாஜி கம்யூனிஸ்த கொன்சாலஸ் என்பவர் கம்யூனிஸத்தின் பயங்கர அலங்கோலத்தன்மையை அம்பலப்படுத்திவிட்டார். அவர் சொன்னதாவது: "சோவியற் ரூஷியாவில் அடிமைத்தொழில் முகாம்களில் உழைக்கும் தொழிலாளரைக்கொண்டுதான் சோவியற்அரசு தனது ஆயுதபலத்தை அதிகரிக்கச்செய்துவருகிறது. அவர்களின் இரத்தத்தை உறிஞ்சிச் சம்பாதிக்கும் பணத்தைக்கொண்டுதான் மஸ்கோ ஏகாதிபத்தியம் தனது வெளிநாட்டு ஏசன்றுகளுக்குக் கூலியும், இம்மாதிரியான விசாரணைகளில் தனது சார்பில் வழக்கறிஞர்களை அமர்த்திச் செலவுபடியும் கொடுத்துவருகிறது. பாசிஸ்தத்தை எதிர்த்துப்போராடியதற்காக நான் வருந்தவில்லை. ஆனுல், ஸ்பெயினில் கம்யூனிஸ்தஆட்சியை அமைக்கலாம் என்று ஒருகாலத்தில் திட்டமிட்டேனே என்பதைக் குறித்துத் தான் மிகவும்துக்கிக்கிறேன். எனது வாழ்க்கையில், சோவியற்அரசின்போக்கு என்னை மிகமிக வஞ்சித்துவிட்டது"

— யுஸிஸ்

### Thanksgiving

My grateful thanks to the Holy Face, Our Lady of Miracles, St. Joseph, Sr. Alphonsa Blessed Martin Depores and St. Jude for granting me so many favours.

M. R.
Jaffna.

## நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின் அளவுகடந்தகிருபையினுலும் இரக்கத்தின் தாயாரின் திருஅருளாலும், அர்ச். சின்னத்திரேசம்மாளின் இடையறு மனுப்பேசுதலினுலும் எனது மகளுக்கு இரண்டுவயதில் தொடங்கியகண்டத்தைச் சுற்றியவருத்தங்கள் ஒன்பதுவயதில் மீட்கப்பட்டுப் பூரணசுகமடைந்தா. அன்னவரின் நாமங்கள் அர்ச்சிக்கப்படுவதாக.

C. P.

திருஇருதயநாதரின் இரக்கத்தினுலும், அர்ச். அந்தோனியார், அர்ச். சூசையப்பர், அர்ச். சந்தியோகுமையோர், பாத்திமா (லூர்து) நாயகி இவர்களினதும் மன்றுட்டினுலும் நான்கேட்ட மன்றுட்டுக்கிடைக்கப்பெற்றேன். இவர்களின் நாமங்கள் என்றும் புகழப்படுவதாக.

சில்லாலை ரி. எஸ்.

பாலைதீவிலே கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் அர்ச். அந்தோனியார் மூலமாக யேசுவின் இரக்கம்நிறைந்த திருஇருதயத்தினிடம் நான்கேட்ட மன்றுட்டு அனுகூலமாயிற்று. நேர்த்திப்பிரகாரம் இதைப் பிரசுரிக்கிறேன்.

யாழ்ப்பாணம் எஸ். எஸ்.

நான் விரும்பிக் கேட்டவிண்ணப்பம் அர்ச். ரீத்தம்மாளின் அனுக்கிரகத்தினுல் நிறைவேறியது. அதற்கு நன்றியாகஇவ்வர்ச்சியசிஷ்டவவுடைய பத்தியை யாவரும் அனுசரிக்கத் தூண்டுதலாய் இதைப் பிரசுரிக்கிறேன்.

யாழ்ப்பாணம் J. A.

யேசுவின் திருஇருதயத்தின் உதவியாலும், பரிசுத்தலூர்துநாயகி, அர்ச். அந்தோனியார், அர்ச். ரீற்றம்மாள் முதலானேரின் மன்றுட்டுக்களினுலும், நான் கேட்ட உதவியைப் பெற்றுக்கொண்டேன். அன்னவரின்நாமங்கள் அர்ச்சிக்கப்படுவதாக.

மாதகல் H. M. RITOR

## நேர்த்தியின் பூர்த்தி

கோடியற்புதவரத்தராகிய அர்ச். அந்தோனியாரிடம் யான் கேட்டுக்கொண்ட மன்றுட்டு இனிதே அனுகூலமாயிற்று. இனிமேலும் அவரிடம் யான் கேட்டுள்ள காரியங்கள் கிடைப்பதாக. அவரது நாமம் புகழப்படுவதாக.

M. A.

## ஊதாரிப்பிள்ளை

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

பாவமன்னிப்பு "ஆ! இது தேவவல்லமையின் எத்துணை அதிசயமானசெயல்? இஷ்டப்பிரசாதத்தை ஆத்துமத்துக்குக் கொடுப்பது. பரலோக பூலோகங்களைச் சிருஷ்டிப்பதிலும் அதிகம்மேலான ஒருஅலுவல்என்று அர்ச். அக்குயினு தோமையார் படிப்பிக்கின்றுர்.

இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் பாவசங்கீர்த்தனஞ் செய்கிறவர்களில் இந்தவரப்பிரசாதம் மேலும் மேலும் விருத்தி அடைகின்றது. புண்ணியங்களும், இஸ்பிரீத்து சாந்துவின் கொடைகளும் அதிகரிக்கின்றன. சாவானபாவத்துடன் இருப்பவர்கள் நல்லபாவசங்கிர்த்தனஞ் செய்தவுடன் முன்னிழந்துவிட்ட இஷ்டப்பிரசாதம் திரும்பவும் கிடைக்கின்றது. நூர்ந்துகிடந்த மின்சாரவிளக்கானது மீண்டும் மின்சாரசக்தியை அனுப்பிவிட்டால் மறுபடியும் பிரபைகாலிக்கும். சூம்பிக்கிடந்த கைகாலில் மீண்டும் இரத்தஓட்டம் ஏற்பட்டால் சோர்ந்த அந்தஅவயவங்கள் மீண்டும் உயிர்பெறும். பட்டுப்போனகொப்பில் மீண்டும்அடிமரத்திலிருந்து சாரம் ஏறுமானுல் அக்கொப்பு முன்போல உயிர்பெற்றுத் தழைக்கும்.

(தொடரும்)

—இப்போதைக்கு யுத்தம் நிகழுமென்று ரூஷியதோழநாடுகளின்தலைநகர்களிலிருந்துவருகின்ற அமெரிக்கஸ்தானிகர்கள் எண்ணுவோராயில்லையென ஐரோப்பாவிலிருந்து அறிக்கைகள் பரந்திருக்கின்றன. இதற்குக் காரணம், கம்யூனிஸ்தநாடுகளிலே கைத்தொழில்உற்பத்தியானது மேலைச்சனநாயகநாடுகளை எதிர்த்து யுத்தம் ஒன்று நடத்துவதற்குப் போதியளவாக உச்சநிலை அடையாதிருப்பதேயாம்.

—பெல்ஜியத்திலே சிவிலுத்தியோகசேவையிலிருந்து கம்யூனிஸ்தர்கள் விலக்கப்படவிருக்கிறுர்கள். இதுவிஷயமாகச் செய்யப்பட்டுள்ள சட்டத்திலே, பெல்ஜியசுதந்தரத்திற்கோ அன்றேல் அதன்பாதுகாப்புக்கோ, அல்லது அரசியலுக்கோ பங்கமுண்டு பண்ணுவதான எந்தஸ்தாபனத்திலும் சேர்ந்துள்ள சிவிலுத்தியோகஸ்தர்கள் பதவியிலிருந்து நீக்கப்படுவார்களென எச்சரிக்கப்பட்டிருக்கிறுர்கள்.

—பத்தாம்பத்திநாத பாப்பானவருக்கு முத்திப்பேறுபட்டம்சூட்டும் திகதிபற்றிய உத்தியோகபூர்வமான அறிவித்தலை இத்தாலியமுழுவதிலும், விசேஷமாய் அவர் கருதினுல் பத்திறியாக்குவாக விளங்கியிருந்த வெனிஸ்நகரும் மிகுந்தஆவலுடன் எதிர்பார்க்கின்றன. ஏனெனில், அத்திருவைபவத்திற்குச் சமுகமளிக்குமாறு ரோமாபுரிக்கு அநேகயாத்திரைகளை ஒழுங்குபண்ணுவதற்கேயாகும்.

—வாஷிங்ரன்நகரிலே போலாந்தஸ்தானிகரின் காரியாலயத்தில் இரண்டாவது ஸ்தானிகராயும், அதிலே வர்த்தக ஆலோசகராயும் இருந்துவந்த திரு. சிக்மண்ட் விற்றின்ஸ்கிஅவர்கள் தம்பதவியை இராசிநாமாச்செய்துவிட்டு அமெரிக்கஐக்கியதேசத்திலே தமக்குப்புகலிடம் அளிக்குமாறு கேட்டிருப்பதாய் அமெரிக்கஅரசாங்கபகுதி அதிகாரிகள் அறிவித்திருக்கின்றுர்கள்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 8 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org